# அதிசயத் தீவினில் ஆனந்தன்

சிறுவர்களுக்கான நவீனம்



கலாபூஷணம் செல்லையா குமாரசாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிசயத் தீவினில் ஆனந்தன்

சிறுவர்களுக்கான நவீனம்

## கலாபூஷணம் செல்லையா குமாரசாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிசயச் தீவினில் ஆனந்தன்


| | | |
|---|---|---|
| ஆசிரியர் | : | செல்லையா குமாராசாமி |
| முதற்பதிப்பு | : | டிசம்பர் 2015 |
| உரிமை | : | ஆசிரியருக்கே |
| வெளியீடு | : | தென்மராட்சி கலாச்சாரப் பேரவை<br>பிரதேச செயலகம்,<br>தென்மராட்சி |
| அச்சுப்பதிப்பு | : | வைரஸ் பிறிண்டேர்ஸ்<br>கே.கே.எஸ் வீதி,<br>இணுவில். |
| பக்கங்கள் | : | 82 |
| விலை | : | ரூபா 150.00 |

நிதி அனுசரணை : கல்வி, பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம்


## Athisaya Theevinil Ananthan


| | | |
|---|---|---|
| Author | : | Sellaiah Kumarasamy |
| First Edition | : | December 2015 |
| Copy Right | : | Author |
| Publisher | : | Thenmaraschi Pirathesasabi<br>Kalasarap Peravai<br>Divisional Secretariat |
| Printers | : | Virus Inuvil |
| Pages | : | 82 |
| Price | : | Rs 150.00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னுரை

சிறுவர்கள் கதை கேட்பதில் ஆசை அதிகம் கொண்டவர்கள் என்பது எல்லோருக்கும் தெரிந்ததே.

அம்மாக்கள் தமது குழந்தைகளுக்கு உணவூட்டும் போதெல்லாம் சின்னச் சின்ன கதைகள் கூறுவார்கள்.

சிறுவர்கள் தமது பாட்டியர்களுக்கு பக்கத்தில் அமர்ந்திருந்தோ படுத்திருந்தோ "பாட்டி பாட்டி கதை சொல்லுங்கோ பாட்டி" என வேண்டுவர். பாட்டிகள் கதை சொல்வார்கள். கதை கேட்டுக் கொண்டே சிறுவர் தூங்கிப் போவர்.

பாட்டிகள் சொல்லும் கதைகள் கொஞ்சம் நீண்டவையாகவும் அவை அனேகமாக இராசா இராணி சம்பந்தப்பட்டவையாகவும் இருக்கும்.

இந்நாட்களில் பாட்டிமார் பேரர்களுக்கு கதை சொல்வதும் அவர்களைக் கதை சொல்லி தூங்க வைப்பதும் மறைவை நோக்கி விரைந்து கொண்டிருக்கிறது. இதற்குப் பலகாரணங்கள் உண்டாயினும் முக்கியமான சில :

பாட்டிமாருக்கு பேரர்களுக்கு ஏற்ற கதைகள் அவர்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய கதைகள் தெரியாது.

பாட்டிமாருக்கு கதை சொல்லும் நேரமும் சரியாக அமைவதில்லை. தொலைக்காட்சி முன் அமர்ந்திருந்து அக்கம் பக்கம் நோக்காதிருப்பவர்களுக்கு நேரம் எவ்வாறு கிடைக்கும் கதை சொல்ல?

ஆகவே சிறுவர்கள் தாமே வாசித்துப் புரிந்து கொள்ளக் கூடிய கதைககள் இலகு தமிழில் எழுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியிடுவது அவசியமெனா எண்ணியே அதிசயத் தீவினில் ஆனந்தனை ஆக்கியுள்ளேன்.

தாய்மார்கள், பாட்டிமார்கள் சொன்ன கதைகளைக் கேட்டே தம்மை உலகம் போற்றும் உத்தமர்களாகவும் வீரதீரச் செயல்கள் செய்பவர் களாகவும் மாற்றிக் கொண்டோரின் வாழ்க்கை வரலாறுகளை நூல்களிலிருந்து அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கின்றது. இதிலிருந்து நாம் எல்லோரும் இளம் வயதுக்காரரின் வாழ்க்கையினை அவர்கள் அறிந்து கொள்பவை மனதில் பதிந்து கொள்பவை திசை திருப்ப வல்லன என்பதனையே.

வாய்மொழியாகவோ நூல் வழியாகவோ வழங்கப்படும் கதைகள் அனைத்தும் அவர்களை நல்வழிப்படுத்துபவையாகவும் வல்லவர்களாகவும் வாழ வழிகாட்டுபவையாகவும் அமைய வேண்டியது கட்டாயமாகின்றது. வெறும் பொழுது போக்குக் கதைகளாக இருக்கக் கூடாது.

கடந்த செப்டம்பரில் வெளிவந்த எனது சிறுவர்களுக்கான "பாட்டுப்பாடுவோம்" கவிதை நூலினைத் தொடர்ந்து எழுதப்பட்டதே இந்த அதிசயத் தீவினில் ஆனந்தன்.

இதனை இவ்வாண்டிலே வெளியிடச் சந்தர்ப்பத்தை எனக்களித்த தென்மராட்சி பிரதேச செயலக கலாசார பிரிவினருக்கும். மற்றும் எல்லோருக்கும் எனது மனம் கனிந்த நன்றிகள். இந் நூல் கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் இளைஞர் விவகார அமைச்சு வடமாகாணம் அனுசரணையுடன் வெளிவருகின்றது.

இவர்களுக்கு என் நன்றிகளை தெரிவிப்பதோடு அழகிய நூலாக அச்சிட்டுஉதவியஇணுவில் வைரஸ் பிறிண்டேர்ஸ் நிறுவனத்தினருக்கும் அச்சுப் பிழைகள் திருத்தி உதவிய என் மருமகன் யோ.சுதந்திரன் அவர்களுக்கும் என்றும் எனது நன்றிகள்.

அன்புடன்
செல்லையா குமாரசாமி
நாவற்குழி மேற்கு,
கைதடி.
டிசம்பர் 2015



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிசயத் தீவினில் ஆனந்தன்

## 1

**அ**ன்புத் தம்பியரே!தங்கையரே! நாங்கள் எல்லோரும் இப்போது அதிசயத் தீவுக்குப் போகப் போகிறோம். இந்த அதிசயத்தீவு இந்து சமுத்திரத்தில் இருக்கிறது. நாம் வாழும் இலங்கைத் தீவிலிருந்து மிக மிக வெகுதூரத்தில் இருக்கிறது.

அங்கே நாங்கள் போவதற்கு முன்னர் ஆனந்தன் என்னும் பெயர் கொண்ட சிறுவனைப் பற்றி உங்களுக்குச் சொல்ல வேண்டும்.

ஆனந்தன் அழகான பிள்ளை. அவன் பிறந்த கிராமத்திலுள்ள பிள்ளைகள் எல்லோரிலும் பார்க்க ஆனந்தன் அழகானவன். பள்ளிகூடத்தில் கெட்டிக் காரன் என்று எல்லோரும் சொல்லும் அளவிற்கு கல்வியில் கவனமாக இருப்பவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மா பெயர் அமுதா, அப்பா பெயர் சுந்தரன், அப்பாவும் அம்மாவும் ஆனந்தனிடத்தில் அன்பைக் கொட்டி வளர்த்தனர். பெற்றவரின் சொற்கோட்டு வளர்ந்து வந்தான் ஆனந்தன். அவர்கள் வாழ்ந்தது ஒரு சிறிய கிராமத்தில். அந்தக்கிராமம் பெரும் காடு ஒன்றிற்கு அருகில் அமைந்திருந்தது பக்கத்தே இந்துமகாசமுத்திரத்திரம்.

விடுமுறை நாட்களில் தன் தோழர்களோடு கூடி அந்தக் காட்டிலுள்ள மலையைப் பார்க்க ஆனந்தன் போவான். மலை உச்சியில் மரங்கள் செடிகள் இல்லை. உச்சிமலையில் நின்று தமது கிராமத்தின் அழகினைப் பார்த்து மகிழ்வார்கள்.

ஒருநாள் ஆனந்தனுடைய வகுப்பாசிரியர் மாணவர்களைப் பார்த்து "நீங்கள் படித்து என்ன தொழில் செய்ய விரும்புகிறீர்கள்" என்று கேட்டார். ஒருவன், "நான் நான் எஞ்சினியராக வர விரும்புகிறேன் என்றான். அடுத்தவன் "டொக்டராக" என்றான். ஒவ்வொருவரும் தமது விருப்பத்தைக் கூற ஆனந்தனின் முறை வந்த போது அவன் முகம் மலர்ந்தது.

"நான் ஒருபுல்லாங்குழல் வித்துவானாக விரும்புகிறேன் சேர், அத்துடன் ஊருக்கும் நாட்டிற்கும் தொண்டு செய்ய விரும்புகிறேன்" என்றான். ஆசிரியர் அவனை அதிசயமாகப் பார்த்தார். ஏனெனில் அவர் புல்லாங்குழல் வாசிப்பவர். "ஏன் நீ அதனை விரும்புகிறாய்" என்று வினவினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏனென்றால் சேர் நீங்கள் புல்லாங்குழல் வாசிப்பதை நான் கேட்டிருக்கிறேன். அந்த இசை என்னை மயக்குகிறது. வீட்டில் ஓய்வாய் இருக்கும்போது வாசித்துப் பார்ப்பேன் என்று கூறிச் சிரித்தான். "சந்தோசம் நீ விரும்பினால் நான் உனக்கு அதைக் கற்பிக்கிறேன், என் வீட்டிற்கு நீ வா. பத்து வயதே ஆகிறது உனக்கு புல்லாங்குழல் வாசித்து பழக இருக்கும் ஆசை என்னை மகிழ்விக்கிறது" என்று சொன்னார் ஆசிரியர்.

ஆனந்தன் ஒழுங்காக ஆசிரியர் வீடு சென்று புல்லாங்குழல் வாசிக்கப் பழகி நல்ல தேர்ச்சியும் பெற்று புல்லாங்குழல் வித்துவான் என்னும் புகழும் தனது இளம் வயதிலேயே பெற்றான். பெற்றோரும் உற்றாரும் உறவினரும் மகிழ்ச்சி அடைந்தனர்.

மாலை வேளைகளில் அயலிலுள்ள காட்டு மலைக்கு தனிமையில் செல்வான் ஆனந்தன். மலை உச்சியில் அமர்ந்திருந்து புல்லாங்குழல் வாசிப்பான்.

வழக்கம் போல ஒரு நாள் மலை உச்சியில் அமர்திருந்து புல்லாங்குழல் வாசித்தான். மலை உச்சியில் அமர்திருந்து தனிமையில் புல்லாங்குழல் வாசித்து கொண்டிருந்த வேளையில் திடீரெனப் பெரும் காற்று வீசுமாப் போல் சத்தம் எழுந்தது. காட்டு மரங்கள் அசைந்து ஆடின. மலையில் நிறைந்திருந்த சருகுகள் பறந்தன. தன்னையும் அந்தக் காற்று தள்ளி விடுமோ எனப் பயந்து ஆனந்தன், எழுந்திருக்க நினைத்த வேளை பென்னம் பெரிய பறவை ஒன்று மலையில் வந்து இறங்கியது. அது ஒரு பெரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகாய விமானமளவு அகலம் நீளத்தில் இருந்தது. ஆனந்தனின் நெஞ்சு படக் படக் என இடிந்தது. எழுந்து நின்றான்.

அந்தப் பறவை பேசியது. "நான் உன்னை அதிசயத்தீவுக்கு கூட்டிப் போக வந்திருக்கிறேன்." மலைத்து போன ஆனந்தன் வாயும் திறக்கவில்லை.

"என்ன பயப்படுகிறாய்? பறவை தமிழில் பேசுகின்ற தென்று அதிசயப்படுகிறாயா? எனக்கு பேசத்தெரியும், இப்போது நீ என்னுடன் வரப்போகிறாய்!"

ஆனந்தன் நடுங்கி நின்றான். பறவைதான் மீண்டும் பேசியது. "தம்பி நான் அதிசயத்தீவிலிருந்து வந்திருக்கிறேன் உன்னை அங்கே கூட்டி போகப் வந்திருக்றேன்."

ஆனந்தனின் கண்களில் நீர் நிறைந்து நடுங்கியபடி அவன் கேட்டான். "நீ என்ன சொல்லு கிறாய்?"

"நீயும் நானும் அதிசயத் தீவுக்குப் போகப்போகிறோம் என்று சொல்லுகிறேன்." பதிலளித்தது பறவை.

"நான் வரமாட்டேன், அம்மாவும் அப்பாவும் என்னைத் தேடுவார்கள் நான் வரமாட்டேன்".

"நீ வரமறுத்தால் உன்னை என் சொண்டால் கவ்விக்கொண்டு போய் விடுவேன் தம்பி". இவர்கள் இருவரும் பேசிக்கெண்டிருந்த நேரம் மலையடி வாரத்தில் மாடு தேடி வந்த கிராமத்தவர் ஒருவர் அந்த பறவையினைக் கண்டு அதிர்ச்சியடைந்தது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுமல்ல "உன்னை கவ்விக்கொண்டு போய் விடுவேன்" எனப் பறவை சொன்னதும் காதில் விழவே விரைந்தோடிச்சென்று கிராமவாசிகள் எல்லோருக்கும் அறிவித்தான்.

ஆனந்தனின் அப்பா அம்மா கிராமத்தவர்களும் திரண்டு பறவையைக் கட்டி இழுக்க கயிறுகளும் அதனை அடிக்க கம்புகளும் கொண்டோடி வந்து கொண்டிருந்தனர்.

பறவையின் வார்த்தைகளை கேட்டு ஆனந்தன் விம்மி விம்மி அழுதுகொண்டிருக்க....

மீண்டும் பறவை "என்முதுகில் ஏறிக்கொள் உன்னை ஏற்றிப்போக என்முதுகில் இருக்க இருக்கையும் கொழுவி வந்திருக்கிறேன், நீ இருக்க வசதியாக" என்று சொன்னது.

இந்நேரம் கிராமத்தவர்கள் விரைந்து வருவதைகட்கண்ட பறவை "நீ என்முதுகில் ஏறச் சம்மதிக்காது விட்டால் கால்களால் தூக்கி போய் விடுவேன். கால்களால் தூக்கினால் உனக்கு வலிக்கும்"என எச்சரித்தது.

"எப்படி நான் உன்மேல் ஏறுவேன்" பயந்து நடுநடுங்கிய ஆனந்தன் கேட்டான். "படுக்கின்றேன். என் சிறகுகளைப் பிடித்து ஏறு" எனக் கூறி கால்களை மடக்கி படுத்தது பறவை.

"நீ பதிந்து படுத்த பின்னரும் பத்தடி உயரம் வரை ஏறவேண்டி இருக்கிறதே" என நினைத்தபடி பறவையின் இறகுகளை இறுக்கமாக பிடித்து அது சொன்ன இருக்கையில் அமர......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனுடைய அம்மா அப்பாவும் கிராமவாசிகளும் மலையில் அதன் உச்சிக்கு ஏறி, பறவையினை அடித்துக்கட்ட அதனருகே வர பறவை எழுந்து தன் சிறகுகளை மேலும் கீழும் விரைவாய் வீச மலை ஏறிய அத்தனை பேரும் புயல் வீசியது போல இறக்கைகளின் காற்றில் நிலை தடுமாறி விழுந்து உருண்டு மலையடி வாரத்திற்கு வந்தனர்.

ஆனந்தன் அழுதபடி இருக்கையில் இருக்க பறவை விண்ணில் பறந்து மறைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2

பறவையின் மேல் அமர்ந்திருந்தபடி நாலுபக்கமும் பார்வையை செலுத்தினான் ஆனந்தன். காடுகள் மலைகள் பெரும் வெளிகளைக்கடந்து பறந்து கொண்டிருந்த பறவை மெல்லத் திரும்பி ஆனந்தனுக்கு சொன்னது. "தம்பி எதற்கும் பயப்படதே. உனக்கு எந்த துன்பமும் நேராது. இந்த உலகத்தில் உள்ள யாரும் கண்டிராத இடத்துக்கு உன்னைக் கூட்டி போகிறேன். அங்கு குமுதா என்னும் பெயருடையவரும் மகளும் சிலமக்களும் என்னைப்போன்ற பறவைகளும் இருக்கின்றன. உன்னை ஒரு ராசகுமாரனைப் போல எல்லா வசதிகளும் செய்து தந்து, நடத்தப்போகிறார்கள் கவலையைவிடு."

விரைந்து ஆகாய விமானம் போலப் பறந்து கொண்டிருந்த பறவை இப்போது கரை காணாச்சமுத்திரத்தின் மேல் பறந்து கொண்டிருந்தது.

சூரிய வெளிச்சத்தில் வெள்ளியினால் செய்த நீளமான உருளைகள் உருள்வது போல அலைகள் உயர்ந்தும் பதிந்தும் ஆடிக்கொண்டிருப்பதை அவதானித்தான் ஆனந்தன்.

ஏறக்குறைய மூன்று மணிநேரம் வரை பறவை பறக்க மேற்கு வானத்தில் சூரியன் சிவந்தும் வேறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல கண்ணைக்கவரும் நிறங்களுடனும் நீருக்குள் மறைந்து கொண்டிருக்க, அந்த காட்சியைக் கண்டதே பிறந்த பலனை அனுபவிக்க போதுமானது போலத் தோன்றினாலும் ஆனந்தனுக்கு அம்மா அப்பாவின் நினைவு வரத்தான் செய்தது.

பறந்து கொண்டிருந்த பறவை திடுமென சமுத்திரத்தை நோக்கி பதிந்து பறந்தது. எட்டடி நீளத்துக்கு குறையாத ஒரு சுறா மீனை தன்னிரு கால்களில் இறுக்கியவண்ணம் மேலே எழுந்து பறந்து கொண்டிருக்க கண்களை கூச வைக்கும் மின் ஒளியில் வானைத்தொட்டாற்போல் எழுந்து நிற்கும் மரங்களும் ஆனந்தனின் கண்பட வியந்திருந்தவன் இவ்வளவு பெரிய சுறாவை தூக்கிவரகிறது தான் உண்ணவோ தாயும் மகளும் சப்பிடவோ தெரியவில்லை என நினைக்க அவனுடைய எண்ணத்தை புரிந்து கொண்டது போலப் பறவை கூறிற்று. "இந்த மீனைத்தம்பி இன்று எங்கள் மாளிகையில் நீயும் சாப்பிட்டு பார் மிகவும் நன்றாக இருக்கும்."

ஆனந்தனின் கண்களுக்கு எவ்வளவு நீளமும் எவ்வளவு அகலமும் கொண்டதாயிருக்கும் என உத்தேசிக்க முடியாது ஆகாயத்தை முத்தமிட்டவாறு எழுந்து நிற்கும் கட்டிடமும் வண்ணவிளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட மைதானமும் தென்பட்டன. அந்த மைதானத்தில் பதிந்து இறங்கி, "இறங்கு தம்பி எமது இடத்திற்கு வந்து விட்டோம், உன்னை அழைத்துப் போக அம்மா வருவார்" என்று சொல்லி அவன் இறங்கக் கூடியதாக தரையில் படுத்தது பறவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தம்பி நீகொஞ்சம் இரு உன்னை நான் இறக்கி விடுகிறேன்" எனக்கூறிசிரித்து வந்த பெண் அவனை இருகைகளாலும் தூக்கி அவனுடைய கன்னத்தில் முத்தமிட்டு தரையில் விட்ட போது ஓடி வந்தாள் ஒரு சின்னப் பெண், குமுதாவின் மகள். அவள் குனிந்து ஆனந்தனின் தலை தடவி உங்களை எத்தனையோ நாட்களாகப் பார்த்துப் பார்த்து காத்திருந்தேன். இன்று சந்தோசமாக இருக்கிது" என்றாள்

ஆனந்தன் பேசவில்லை அவளை நிமிர்ந்து பார்த்தான். பின்பு தன்னைப்பார்த்த போது தன் உயரம் அளுடைய முழங்கால்களுக்கும் கீழேதான் என்பதை புரிந்து கொண்டான்.

மகள் எட்டடி உயரம் இருக்கும். குமுதாவை குறைத்து மதிப்பீடு செய்தாலும் பதினெட்டடிக்கு குறையாத உயரமும் கொடியுடலும் துடையிடையும் தங்க நிறமும் கன்னியர் கண்டு பொறாமை கொள்ளும் அளவுக்கு அத்தனை அழகு கொண்டவளாகவும் கம்பீரமாகவும் அவன் முன் நின்றாள். "உள்ளே போவோம் வாருங்கள்" என்ற பறவையிடம் "நீ கொண்டு வந்த மீனை வெட்டிக்கழுவி கறி சமைக்க சொல் சமையலாளிடம். வந்த தம்பிக்கு சுவையான விருந்து கொடுக்க வேண்டும்" என்றாள்.

குமுதா முன் செல்ல, மகள் ஆனந்தனை கை பற்றி பின் தொடர்ந்தாள். அவர்கள் செல்ல இருபதடி உயரம் பத்தடி அகலமும் கொண்ட கதவு தானே திறந்து அவர்களுக்கு வழிவிட்டு தானாக மூடிக்கொண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கால்வைத்த போது வழுக்கி விழுத்திவிடும் போலிருந்த தரைக்கு மென்மையான கம்பளங்கள் விரிக்கப்பட்டு இருந்தன.

அறைக்கதவுகள் ஒவ்வொன்றும் முன்னர் கூறப்பட்ட அளவிலேயே இருந்தன. ஆனந்தனை ஓர் அறைக்கு அழைத்துச் சென்றனர். "இந்த அறையை நீர் பாவிக்கலாம் தம்பி" என்றாள் குமுதா கனிவோடு. அறையைப் பார்த்ததும் பிரமித்துப் போனான் ஆனந்தன். அது சுமார் ஐம்பதடி நீளமும் சுமார் நாற்பதடி அகலமுடயதாகவும் இருந்தது. கட்டில், மெத்தை விரிப்புக்களோடு இருபத்தைந் தடி நீளமும் எட்டடி அகலமும் கொண்டது.

"இந்தப்பெரிய அறை எனக்கெதற்கு". அவன் கேட்க குமுதா கூறினாள் "இந்த தீவில் இருப்பவர்கள் எல்லோரும் என்போன்று உயரமானவர்களே. அதனால் தளபாடங்களைக் கூட பெரிதாகவே செய்துள்ளோம். எமது பாவனைக்குரிய பாத்திரங்களும் உனக்கு பெரிதானவையாகவே தோன்றும். பிரயாணத்தில் களைப்படைந்து இருப்பாய் என்ன குடிக்க விரும்பு கிறாய்?"

அவன் எதுவும் புரியதவனாக பயத்தில் நடுங்கிக் கொண்டு நிற்க வேறொரு பெண் அவளும் குமுதாவை போன்ற பேருருவம் கொண்டவள், தங்கக் கிண்ணத்தில் அவன் பருக பானம் கொண்டு வந்து நீட்டினாள். அவன் அதனை வாங்கவில்லை. மூவரையும் மாறிமாறி பார்த்துக்கேட்டான், "என்னை இங்கு ஏன் கொண்டு வந்தது பறவை?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பயப்படாமல் இந்தப் பானத்தை பருகு, பருகிய பின்னர் நீ குளி. குளித்த பின்னர் அணிந்து கொள்ள உனக்களவான உடுப்புகளும் அதோ அந்த மேசையில் இருக்கின்றன" என உடுப்புகள் வைக்கப்பட்டிருந்த மேசையை சுட்டிக் காட்டி, பானம் கொண்டு வந்த பெண்ணிடமிருந்த கிண்ணத்தை வாங்கி அவனுடைய கையில் கொடுத்தாள்.

பெற்றுக்கொண்டவனுக்கு அந்தப் பாத்திரம் அதிசயத்துக்கு மேல் அதிசயத்தைக் கொடுத்தது. ஏனெனில் பானமிருந்த பாத்திரம் தங்கத்தாலானது.

அவனுடைய மனநிலையை புரிந்து கொண்ட குமுதா "நாங்கள் பாவிக்கும் பாத்திரங்கள் எல்லாமே தங்கத்தால் ஆனவையே தம்பி, நீ அதிசயப்படாதே."

களைத்திருந்த ஆனந்தன் கிண்ணத்தை வாயில் வைத்து சொட்டுச் சொட்டாக பருகினான். அது மிகவும் சுவையாக இருந்ததால் முழுவதையும் குடித்து முடித்தான்.

பானம் முழுவதையும் ஆனந்தன் பருகி முடித்ததும் குமுதா கேட்டாள் "உமது பெயர் என்ன?"

"ஆனந்தன்"

"எனது மகளின் பெயர் நந்தினி, உமது வயது?"

"பத்து"

"மகளுக்கு எட்டு. நாளையதினம் நந்தினியின் பிறந்த நாள் கொண்டாட்டம்."

அவர்கள் போனதும் ஆனந்தன் குளித்தான். குமுதா காட்டிய ஆடைகளை அணிந்தான். அவனுடைய உடலமைப்புக்கு அளவான உடை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணாடியில் பார்த்தான். சினிமாப் படங்களில் காட்டப் படும் இளவரசன் போல தோன்றியதில் பெருமகிழ்ச்சி. ஆயினும் பெற்றவர் நினைவு வந்தது, கண்ணீரும் பெருக்கெடுத்தது.

ஒளி வெள்ளத்தில் இரவு வந்தது தோன்ற வில்லை.

சுறாப் பொரியல், குழம்பு, காய்கறிகள், பலகாரங்கள், பழங்கள், தங்கத் தட்டுக்களில் கொண்டு வந்து வைக்கப்பட்டன.வேண்டியவற்றை உண்டான்.

கட்டில் மூலை ஒன்றில் படுத்தான் உறக்கம் வரவில்லை. பல எண்ணங்கள் எழுந்து வதைத்தன. "புதையல் எடுப்பதற்கு இளம்பிள்ளைகளைப் பலி கொடுக்கிறார்களாம். அதற்காகத்தான் என்னை கொண்டு வந்தது பறவை. என்னை வெட்டத்தான் இந்த உபசரிப்பு." கண்ணீரும் பெருக்கெடுத்தது தலையணை நனைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3

விடிந்தது கூடத் தெரியாமல் கட்டிலில் சுறுண்டு கிடந்த ஆனந்தன் கண் விழித்த போது யன்னல் வழியாக சூரிய ஒளி அறையில் விழுந்து கொண்டிருந்தது. கதவு திறந்திருந்தது. யன்னல் கதவுகள் திறந்திருந்தன. அவன் இரவுச் சாப்பாடு முடித்துச் சாத்தியவை இவை. மேசையில் பால் கிண்ணம் மூடியபடி கிடந்தது.

எழுந்து அமர்ந்தான்.

கண்களில் மிளகாய்ப்பழம் கசக்கி விட்டால் போல் எரிவெடுத்தது.

காலைக் கடன் முடித்து பால் பருகிக் கொண்டிருந்த போது நந்தினி வந்தாள். அவனருக மர்ந்தாள். நிமிர்ந்து அவளுடைய முகம் நோக்கினான்.

அவள் முகமலர்ந்தாள். "இன்று எனது பிறந்தநாள் ஆனந்தன்."

"பிறந்தநாள் வாழ்துக்கள்."

"நன்றி இன்று எல்லோரும் வருவார்கள். உங்களை அவர்களுக்கு நான் அறிமுகம் செய்யவிருக்கிறேன்."

"நான் உன்னை ஒன்று கேட்கிறேன். நீ சரியான உண்மையான பதில் சொல்ல வேண்டும்."

"சொல்லுவேன்."

"அந்தப் பறவை என்னை இங்கே ஏன் கொண்டு வந்தது?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இதற்கு உங்களுக்கான பதில் சொல்லவே இப்போது இங்கே வந்திருக்கிறேன், எழுந்திருங்கள். என்னோடு எனது அறைக்கு வாருங்கள் பதில் தெரியும்" எனக் கூறி அவனுடைய கரம் பற்றினாள்.

அவளுடைய அறையை அடைந்து அவன் பார்த்த போது, அதுவும் கூட மிகப் பெரிய அறையாகத் தெரிந்தது.

அங்கே எமது தொலைக் காட்சிக் கருவி போன்ற ஒன்று எமது இரட்டைக் கதவளவில் சுவரோரம் தெரிந்தது.

அதன் முன் அமர்ந்தாள்.

இருக்கையில் அவனைத் தூக்கி அமரச் செய்தாள்.

"இந்தக் கருவிக்கு என்னபெயர்?" ஆனந்தன் கேட்டான். இது ரீவியா?"

"இதை நாங்கள் "உ.பா.க" என்று சொல்லுவோம்"

"உ.பா.க என்றால்"?

"உலகைப் பார்க்கும் கண்ணாடி. இதில் உங்களை நீங்கள் பார்க்கப் போகிறீர்கள்."

ஆனந்தன் புல்லாங்குழல் வாசிக்க அமர்ந்திருந்த மலை தெரிந்தது. அவனை தூக்கி வந்த பறவை தெரிந்தது. இவனுடைய ஊர் மக்களுடன் அம்மா, அப்பா வந்தது தெரிந்தது. பறவையில் அவன் ஏறுவது தெரிந்தது. பறவை அவனோடு பறந்தது தெரிந்தது.

"நீங்கள் புல்லாங்குழல் வாசித்ததை பாருங்கள்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலை மீது தான் அமர்ந்திருந்து புல்லாங்குழல் வாசித்ததையும், புல்லாங்குழல் இசையையும் பார்த்தான் காதால் கேட்டான்.

அவனுக்கே தன் செவிகளை நம்ப முடியவில்லை, அத்தனை இனிமையாக இருந்தது.

“என் புல்லாங்குழலிலிருந்தா இந்த ஒலி வருகிறது?” அவன் கேட்டான்.

“வேறு யாருடையதுதென்று நினைக்கிறீர்கள். உங்களுடையதே.” அவள் முறுவலித்தாள். சொன்னாள். “ஆறு நாட்களுக்கு முன்னர் அமெரிக்காவில் என்ன நடக்கிறது என்று பார்க்க உ.பா.க வை திருப்பினேன். பின்னர் இந்தியாவைப் பார்த்தேன். பின்னர் இலங்கைக்குத் திரும்பினேன். கொழும்பில் வாகன நெரிசல் பார்த்தேன். திருப்பிக் கொண்டு இருந்தேன். ஒரு கிராமமும் மக்களும் தெரிந்தனர். உங்கள் மலை தெரிந்தது, புல்லாங்குழல் ஒலி காதில் விழுந்தது. அதன் இனிமையை என்னவென்று சொல்ல?”

ஆனந்தன் மகிழ்ந்து சிரித்துக் கொண்டே கேட்டான். “உண்மையாகத்தான் கூறுகிறாயா நந்தினி? அல்லது வெறும் புளுகா? முகத்துதியா?”

“இல்லவே இல்லை. பொய்யும் இல்லை புளுகும் இல்லை. அன்றிலிருந்து உங்களை நேரில் பார்க்க வேண்டும் என்று ஆசை கொண்டேன். உங்களிடம் என்னை கூட்டிப்போகும்படி அம்மாவிடம் கூறினேன்.”

“சுத்தப் பொய் நந்தினி இதெல்லாம் பச்சைப் பொய்” இடை மறித்தான் ஆனந்தன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீங்கள் நம்பாவிட்டால் போங்கோ" பொய்க் கோபங்காட்டி, " அம்மாவை கூப்பிடுறன் அம்மா என்ன சொல்லுறா எண்டு கேளுங்கோ" என நந்தினி சொல்லி முடிப்பதற்கிடையில் அம்மா வந்தாள். "உங்கடை சம்பாசனை எல்லாம் என் அறையில் இருந்து கேட்டதனால் எழுந்து வந்தேன்" எனச் சொல்லி அமர்ந்தவள் தொடர்ந்தாள்.....

"தம்பி ஆனந்! நான் சொல்வதைக் கேள். நந்தினி சொன்னதெல்லாம் உண்மை. உன்னைத் தான் நேரில் வந்து பார்க்கவும் ஆசைப்பட்டதும் உண்மை. உன்னிடம் அவளை கூட்டி வருவது முடியாத காரியம். இந்த தீவைவிட்டு யாரும் வெளியே போக அனுமதியில்லை."

"அப்படியானால் அந்தப் பறவை எப்படி என்னிடம் வந்தது" என்று கேட்டான் ஆனந்தன்.

"நந்தினி, உன்னை பார்க்க வேண்டும் நீ புல்லாங்குழல் வாசிப்பதைக் கேட்க வேண்டும் என்று அடம்பிடித்தாள். அழுதாள் அரற்றினாள் பைத்தியம் பிடித்தவள் போலானாள். என்ன செய்வதென்று எனக்கு ஒன்றுமே தெரியாது போச்சு. பெத்தமனம் பித்து பிள்ளை மனம் கல்லு என்று சொல்லுறவை யெல்லோ. அவள் அழ நானும் அழுதேன்."

"என்ன நந்தினி அம்மாவை அழவைக்கலாமா?" ஆனந்தன் கேட்டான்.

"நான் வேறொன்றும் கேட்கவில்லை, உங்களிடம் கூட்டிப் போகத்தானே கேட்டேன்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“தம்பி ஆனந்! இவளுக்கு எங்களுடைய சட்ட திட்டம் ஒன்றும் தெரியாது, சின்னப்பிள்ளைதானே. என் அனுமதியில்லாது யாரும் தீவை விட்டுப்போக முடியாது. உ.பா.கவில் அடிக்கடி உம்மையும் புல்லாங்குழல் இசையையும் கேட்டுக் கொண்டு சாப்பிட மறுத்தாள். அதனால்தான் அந்த பறவை பச்சாவை அனுப்பி உம்மை அழைத்து வரச் செய்தேன். பச்சாதான் பறவையின் பெயர். இது நடந்ததும் நந்தினியின் மனம் ஆறுதலடைந்தது நேற்றுத்தான். நெடுநாட்களுக்குப் பின் முகம் மலர்ந்ததை நான் பார்த்ததும் நேற்றுத்தான்.”

தன்னைப் புதையல் எடுப்பதற்கு பலி கொடுக்கவே என ஆனந்தன் எண்ணிப் பயந்த பயம் பறந்து போய் மனந் தெளிந்தவன் “புல்லாங்குழலை எடுத்து வந்து இப்போதே வாசிக்கட்டுமா,” என நந்தினியை பார்த்தான்.

“அதற்காகத்தானே இந்தத் தொல்லைககள் எல்லாம்” என்றாள் குமுதா.

ஆனந்தன் வாசிக்கத் தொடங்கினான்.

கண்களை மூடி ரசித்துக் கொண்டிருந்தாள் நந்தினி.

ஒருமணி நேரம் ஓடி மறைந்தது. குமுதாவும் தலையினை ஆட்டி ரசித்தாள். ஆனந்தன் வாசிப்பதை நிறுத்திய போதுதான் சுயநினைவு வந்தவளாய் எழுந்து ஆனந்தனை அவனது கன்னங்களில் ஓரிரு வயதுக் குழந்தையை முத்தமிடுவது போல் முத்தமிட்டு “ஆனந் உனக்கு என்ன பரிசு தந்தாலும் உன் வாசிப்புக்கு ஈடாகாது. இன்றிலிருந்து நீ இங்கே தான் இருக்கப் போகிறாய். உனக்கு எல்லா வசதிகளும் செய்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவேன். ஆனால் நீ நந்தினியைப் போல அடம் பிடிக்கக் கூடாது' என கூறி அவனை இருக்கையில் விடுத்தாள்.

"எனக்கு அம்மாவும் அப்பாவும் இருக்கிறார்கள். எத்தனை வசதியாக இங்கே நான் வாழ்ந்தாலும் அவர்களோடு இருப்பது போல, அவர்கள் தரும் கூழ் கஞ்சியைக் குடிப்பது போல, பழைய பாயில் அம்மாவின் பழைய சாறியை விரித்துப் படுப்பது போல வருமாம்மா? வராது." ஆனந்தனின் கண்கள் கலங்கின.

"மனதை தளரவிடாதே ஆனந், எனக்கு உன் மனநிலை விளங்குகிறது. நானும் ஒரு தாய் என்பதால் உன் பெற்றோரின் மனங்கள் தவிக்கும் என்று புரிகிறது. எதற்கும் பொறுத்திரு, இன்று நந்தினியின் பிறந்த நாள் கொண்டாட்டத்தில் உன் புல்லாங்குழல் வாசிப்பு இடம் பெற்றதன் பின்னர் எல்லாம் சொல்லுவேன். ஒருவேளை நந்தினி விரும்பினால் அவளுக்கு புல்லாங்குழல் வாசிக்கக் கற்றுக்கொடு. அவளுடைய மனம் நோகாது நீதான் பார்த்துக் கொள்ள வேண்டும்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4

பச்சா என்னும் பெயர் கொண்ட பறவை ஆனந்தனை காவிவந்து இறக்கிய வெளி அலங்கரிக்கப்பட்டது. மாலை ஆறு மணிக்கு முன்னரே அந்த வெளியை சுற்றிநின்ற மின்கம்பங்கள் ஒளி பாய்ச்சி இரவைப் பகலாக்கின.

ஏழு மணிபோல் வாத்தியங்கள் முழங்கின. அதிசய தீவு மாளிகையில் கடமை செய்யும் ஆண்களும் பெண்களுமாக அங்கே கூடி அமர்ந்தனர்.

பச்சாவைப் போன்ற தோற்றமுடைய முந் நூற்றுக்கு குறையாத பறவைகள் அந்த வெளியில் சுற்றி நின்றன. இந்தப் பறவைகளே அதிசயத் தீவின் காவலர்கள். தீவினை சுற்றி மதில் கட்டியவாறு வானத்தை முட்டுவது போல வளர்ந்து நிற்கும் மரம் ஒவ்வொன்றும் எட்டடி விட்டம் கொண்டவை. மரங்களில் இரவு பகலாக காவல் காப்பவைகள். வேறு காவல் இத்தீவில் இல்லை யாரும் உள்ளே புக முடியாது!

குமுதாவும் மகளும் அங்கே அழைக்கப் பட்டிருந்தவர்களும் மேடையில் வந்தமர்ந்தனர்.

வாத்திய இசை வானைப் பிளந்தது. காவல் பறவைகள் இசைக்கேற்றவாறு தலையசைத்து ஆடின, பாடின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பச்சா மேடைக்கு அருகே நின்று பாடல் ஒன்று பாடித் திரும்பியது. மகிழ்ச்சியில் பறவைகள் மேலேழுந்து கீழிறங்கின.

"இப்போது வாசிக்க ஒருவர் வந்து கொண்டிருக்கின்றார். அவரை பார்த்தால் உங்களுக்கு ஆச்சரியமாக இருக்கும். அதேவேளை அவருடைய இசையில் அனேகமானோர் மயங்குவீர்கள்." குமுதாவின் அறிவித்தல் கேட்டதும் அங்கே அமைதி நிலவியது.

பச்சா முன்னும் ஆனந்தன் பின்னுமாக மேடையை நோக்கி வந்து கொண்டிருந்தனர்.

அவர்களின் வருகை ஆனையின் பின்னே குட்டிச் சுண்டெலி வருவது போலிருந்தது.

பறவைகள் சிறகுகளை விரித்தன. வாய் திறந்து சத்தமிட்டன "வருக வருக தம்பி குட்டித்தம்பி வருக" என வரவேற்றனர் பணியாளர்.

குமுதா மேடையிலிருந்து இறங்கி மேடையில் ஆனந்தனை தூக்கி அமரவைத்தாள்.

"யாரப்பா இந்தக் குட்டிப்பையன்? இவனா எங்களுக்கு புல்லாங்குழல் வாசித்து மயங்கவைக்கப் போகிறான்" எனக் கிசுகிசுத்தனர்.

ஆனந்தன் புல்லாங்குழலை எடுத்தான், வாயருகே கொண்டு போனான். அங்கே தேன்மாரி பொழிந்தது. ஒவ்வொரு பறவையினது மூச்சுவிடும் சத்தத்தை தவிர வேறு எந்தச் சத்தமும் வரவில்லை.

ஆனந்தன் வாசித்தான், வாசித்தான் ,வாசித்துக் கொண்டே இருந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆடுகள் மாடுகள் தீவிலுள்ள மிருகங்கள் அத்தனையும் பாய்ந்தோடி வந்து தலையசைத்து நின்றன. சிறிய பறவைகள் தாம் இருந்த இடத்திலேயே இசை வந்த திசை நோக்கி அமர்ந்திருந்தன.

குமுதாவின் கண்களிலிருந்து நீர் சொட்டுச் சொட்டாய் வழிந்தது. அது ஆனந்தக் கண்ணீர்.

நந்தினி மூச்சு விடவே மறந்தவள் போல் ஆனந்தனையே கண் இமைக்காது பார்த்திருந்தாள். மெய் மறந்திருந்தாள் என்பதே பொருத்தமான வார்த்தைகள்.

சுமார் முக்கால் மணிநேரம் வாசித்த ஆனந்தன் வாசிப்பை நிறுத்திய போது பறவைகளும் மாளிகை ஊழியர்களும் ஓடி வந்து மேடையை சூழ்ந்து கொண்டனர்.

குமுதா ஆனந்தனைத் இருகரங்களாலும் தூக்கி உச்சி மோந்து எல்லோரும் பார்க்கக் கூடியதாக உயரப் பிடித்தாள்.

எல்லோரும் மகிழ்ச்சிக் கடலில் மூழ்கினர்.

பல வகையான பலகாரங்கள் பெரும் பெரும் தாம்பாளங்களில் நிறைத்துப் பத்து இடங்களில் வைக்கப்பட்டன.

"சாப்பிடுங்கள்" குமுதா சொன்னாள்.

பறவைகள் ஒழுங்காகச் சென்று கவ்விக் கவ்வி உண்டன.

பெரும் அண்டாக்களில் பழரசம் நிறைத்து எடுத்து வந்தார்கள். பறவைகள் சொண்டுகள் வைத்து பருகின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனந்தனும் குமுதாவும் நந்தினியும் விருந்துண்டு விடை பெற்றனர்.

இரண்டு வாரங்கள் கழிந்தன.

இந்த இரண்டு வாரங்களிலும் நந்தினி ஆனந்தனிடம் புல்லாங்குழல் ஓரளவு வாசிக்க கற்றுக் கொண்டாள். அவனோடு அன்பாய்ப் பழகினாள்.

நாட்கள் நகர நகர இந்தத் தீவில் ஏதோ மர்மம் இருப்பது போல ஆனந்தனுக்குத் தோன்ற அதனை அறியும் ஆவல் நாளும் பொழுதும் விஷ்வரூபமெடுத்தது. பெற்றவருடைய நினைவு வராது இருக்கவில்லை. இருந்தும் இந்தத் தீவில் மறைந்திருக்கும் மர்மத்தை அறிந்து கொண்டே வெளியேறவேண்டும் என மனதைத் திடப்படுத்திக் கொண்டான். வெளியேறுவதும் நடைமுறைக்கு ஒவ்வாது.

எங்கே பார்த்தாலும் இருபத்தைந்து முப்பதடி சுற்றளவு கொண்ட மரங்கள். அம்மரங்களில் காற் பந்து வடிவங்கொண்டு நமது நாட்டு, வைக்கோல் பட்டறை அளவு தொங்கும் காய்கள், பழங்கள். இது காலம் வரை இத்தனை பெரிய மரங்கள் இந்த உலகத்தில் நிற்பதாக யாரும் சொன்னதுமில்லை புத்தகங்களிலோ பத்திரிகையிலோ யாரும் படித்தாகவும் இல்லை. இந்தக் காய்களில் ஒன்றும் நமது வீட்டின், மேல் விழுந்தால் அவ்வளவு தான். வீடு சுக்கு நூறு-தரை மட்டம்.

டைனோசர் போன்றவை முற்காலத்தில் இருந்ததாக அறிந்திருதந்தாலும், இந்த தீவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பறவைகள் அந்த டைனோசர்களையே கபளீகரம் செய்து விடும் போலல்லவா தோன்றுகிறது.

அடுத்து குமுதாவென்ற பெண்ணின் உயரமும் பருமனும். எட்டே எட்டு வயதுகொண்ட நந்தினியுமோ எட்டடி உயரமுடையவளாய் வளர்ந்து நின்றாள். பணி செய்வோரும் பதினெட்டடி உயரத்துக்கு குறையாதவர்கள்.

குமுதாவின் கணவன் யார்? அவர் எங்கே? இந்தப் பறவைகள் எங்கிருந்து வந்தன? பச்சா பறவையை பேச வைத்தது யார், எப்படி? காவல் செய்ய பழக்கியது எப்படி? அவைகள் ஏன் இந்தப் பெண்ணுக்கு கீழ்படிந்து செயல்படுகின்றன?

யாரைக் கேட்டு அறிவது? யார் கூறப்போகிறார்கள்.?

நந்தினியிடம் நட்பை வளர்த்து..... குமுதாவுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தி..... பெற்றோரையும் பிறந்த மண்ணையும் மறந்துவிட்டதாய் நடித்து.....

பற்பல யோசனைகள்.

உண்பதும் உறங்குவதும் நந்தினிக்கு புல்லாங்குழல் கற்றுத் தருவதுமாகவா காலங் கழிப்பது?

எல்லாமே அந்த வீட்டுக்குள்.

வெளியே செல்ல வாய்ப்பு வரவில்லை.

வாய்ப்பினை வலிந்து தான் வரச் செய்ய வேண்டும்.

தலையை உடைத்து யோசித்தான் ஆனந்தன்.

"அம்மா அம்மா" என்று குமுதாவுக்கு வால் பிடித்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நந்தினி நந்தினி" என்று நந்தினிக்கு பின்னே திரிந்தான்,

எதுவுமே எடுபடவில்லை.

பொறுத்துப் பொறுத்து இருந்தது போதும். நேராக கேட்டுப் பார்ப்போமே.

"நந்தினி, எந்த நாளும் நான் வந்ததிலிருந்து இந்த வீட்டுக்குள்ளேயே அடைந்து கிடக்கிறேன். ஒருநாளாவது இரண்டு பேருமாக வெளியே போய் உலாவி வரலாம் என்று நினைக்கிறேன். நீ என்ன சொல்கிறாய்?" குழைந்தான்.

அதிர்ந்து போனாள் நந்தினி. "நான் பிறந்த நாளிலிருந்து இந்த வீட்டுக்குள்ளேயே அடைபட்டுக் கிடக்கிறேன். வெளியிடம் ஒன்றும எனக்குத் தொரியாது அம்மாவின் அனுமதி இல்லாமல் இந்த வீட்டையும் மைதானத்தையும் விட்டு வெளியே போக முடியாது. எனக்கும் தீவைச் சுற்றிப் பார்க்க ஆசைதான்- முடியவில்லை."

"புல்லாங்குழலின் இசையில் மயங்கி என்னைப் பார்ப்பதற்காக அழுதது போல அழுது பாரேன் நந்தினி."

"தீவிலே பூதங்களும், விழுங்கிவிடக் கூடிய பாம்புகளும் இருப்பதாக அம்மா சொன்னார்."

"நான் அம்மாவின் அனுமதியைப் பெறுகிறேன் நீ என் கூட வருகிறாயா?"

"நூறு முறை."

மறுநாள் தீவைச் சுற்றிப் பார்ப்பதற்கு குமுதாவிடம் அனுமதி பெற அவளுடைய அறை நோக்கி நடந்த ஆனந்தனை இடை மறித்தாள் நந்தினி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அப்பாவிடமிருந்து அம்மாவுக்கு நேற்று இரவு செய்தி ஒன்று வந்ததாம்....." அழுதாள்.

"என்ன செய்தி?" ஆவலாக கேட்டான் ஆனந்தன்.

"உங்களை உடனே கொலை செய்து புதைத்து விட வேண்டுமாம்." அங்குமிங்கும் பார்த்துவிட்டு "நான் சொன்னேன் என்று யாருக்காவது சொன்னீர்களானால் என் தலையும் போய் விடும். அம்மாவும் உங்களை கொன்றுவிட தீர்மானித்தார். நான் அழுது தடுத்தேன். இனி என்ன செய்வாவென்று ஒன்றுமே அறியேன்" எனக் கூறி ஓடி மறைந்தாள் நந்தினி.

"எனக்கு ஆபத்து வரப் போகிறது உயிரையும் உடலையும் பிரிக்கும் நாள் விரைந்து வந்து கொண்டிருக்கிறது" ஆனந்தனுக்கு அழுகை பீறி வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5

நந்தினியின் கூற்றைக் கேட்டதும் ஆனந்தனின் உடல் நடுங்கத்தான் செய்தது. தன்னைத் தானே தேற்றிக் கொண்டான். மனதிலொரு தென்பு பிறந்தது, எல்லோருடைய கண்களிலும் மண்ணைத் தூவிவிட்டு இங்கிருந்து கிழம்பிவிட வேண்டும். எங்கே போவது எப்படி போவது என்பது பற்றி பின்னர் யோசிக்கலாம்.

திரும்பித் தனக்கு ஒதுக்கப்பட்ட அறையினை நோக்கி வந்தான். அறை புகுந்ததும் தன் அறைக்கதவு இழுத்து பூட்டப்பட்ட சத்தம் காதில் இடியாய் விழுந்தது.

யன்னல் கதவுகள் திறந்திருந்தன. கம்பிகளில் பிடித்துக் கொண்டு வெளியே நோக்கினான். எதிரே நின்ற பெருமரத்தில் இருபதடி உயர மனிதன் ஒருவன் ஏறினான். முற்றியகாய் ஒன்றை வீழ்த்தினான். பெரும் சத்தம் எழுந்தது. இன்னும் ஒருவன் வந்தான் அவனிடம் இயந்திர வாளொன்று இருந்தது. வீழ்ந்த காயை வாளினால் அரிந்து இரண்டு பாதிகளாக்கிய அவன் அதன் சுளைகளை உண்டு வித்துக்களை வேறாக்கி மரத்தடியே போட்டான்.

“வித்துக்களை இரவு வேக வைத்துச் சாப்பிடலாம், ருசியாக இருக்கும்” இவன் கூறியது ஆனந்தனின் காதை எட்டியது.

“எனக்கும் பங்கு தரவேண்டும” என்றான் காயை வீழ்த்தியவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏன் இந்தக் காயை வெட்டி இரு பாதிகளாக்கச் சொன்னார் குமுதா?"

"உனக்கத் தொரியாதா சங்கதி? புல்லாங்குழல் வாசித்த குட்டிப் பயல், தீவைச் சுற்றிப் பார்க்க வேண்டும் என்று சொன்னானாம் நந்தினிக்கு. அதை அறிந்து விட்டார் குமுதா. இவனை இங்கே வைத்திருந்தால் ஆபத்தாக முடியும் என்று நினைத்து, முதலில் அவனைக் கொன்றுவிட நினைத்தவர், நந்தினியின் வேண்டுதலுக்காக அவன் சின்னப்பயல், அவனைக் கொல்லாது, இவனை கடற்கரைக்கு தூக்கிப்போய் இந்தப் பாதிக்காய் ஓட்டுக்குள் இருத்தி, தள்ளி விட்டால் எங்கேயாவது போய் உயிர் வாழட்டும்; செத்தாலும் செத்துப் போகட்டும் என மனம் மாறி விட்டார். இன்று இரவு நடுச்சாமம் நான்தான் கடலில் விடப் போகிறேன்."

"எலி போன்ற இந்தப் பயலால் இந்தத் தீவுக்கு என்ன ஆபத்து நேர்ந்துவிடப் போகிறதாம்?'

"அந்நியர் என்று யாரும் இங்கே இல்லை. எலியளவு பொடியன் வளர்ந்தால், இங்கேயுள்ள இரகசியங்களை வெளியே தெரியப்படுத்தி விடுவனோ என்றும் பயந்தான்."

"என்னப்பா பெரிய இரகசியம்? எங்கு பார்த்தாலும் தங்கமலை. இந்த தங்கத்தில் பாதி..... பாதியென்ன கால் பங்கு போதுமே இந்த உலகத்தை விலைக்கு வாங்க. உனக்குத் தெரியாதென்று நினைக்கிறேன், குமுதாவின் கணவன் இந்தத் தங்கத்தில் வெட்டி வெட்டி வேற்றுக்கிரகம் ஒன்றிலே இருக்கின்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்களுக்குக் கொடுத்து அமெரிக்காவில் பெரும் பெரும் மாளிகைகள் கட்டி பெரும் பணம் படைத்தவராய் வாழுகின்றார்."

"இவருக்கும் வேற்றுக் கிரகவாசிகளுக்கம் தொடர்பு இருக்கிற சங்கதி இப்பத்தானே எனக்குத் தெரியும்."

"இதெல்லாம் உனக்குத் தெரியாதா தோழா? அவருக்கு அந்த நாட்டிலே பெண்டாட்டி பிள்ளைகள் கூட இருக்கிறார்கள். இவ குமுதா இவருடைய இரண்டாந்தாரந்தானே."

"வேற்றுக் கிரக வாசிகளுக்கு எதற்காகத் தங்கம்?" தங்கம் மற்ற உலோகங்கள் போலத் தேய்வதில்லை. அதனாலேதான் இடைக்கிடை இங்கே வருகிறார்கள். அவர்களோடு குமுதாவின் கணவரும் வருவார். இங்கே உணவில்லாமல் பட்டினியில் சனம் செத்துக் கொண்டிருக்க, எங்கள் நாட்டுத் தங்கம் வேற்றுக் கிரகத்துக்கு போகிறதா? கேட்கக் கேட்க ஆத்திரம் வருகுது."

"ஆத்திரப்பட்டு என்ன செய்யிறது? இருக்கும் வரை இருந்துபோட்டுப் போக வேண்டியது தான்."

"நமக்கேனப்பா வீண் வம்பு?"

இரவு வந்தது

மின்ஒளியில் அதிசயத்தீவு பகல் போலானது. வழமை போல் உணவு வந்தது. வயிறு நிறைய உண்டான். "இது தான் எனது கடைசி உணவோ தெரியவில்லை" என நினைத்தவன் "கடலில் என்னை விட்டாலும் ஏதாவதொரு கரையை அடைந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிசயத்தீவின் இரகசியத்தை அம்பலப்படுத்தித் தீவை அரச உடமையாக்காது நான் விடப் போவதில்லை. நான் உன்னையும் உன் சகாக்களையும் என்ன செய்யப் போகிறேன் என்பதை இருந்து பார்." சபதம் செய்வது போலத் தனக்குத் தானே சொல்லி அறையில் உலாவினான். நேரம் பத்து மணியானதை அறிந்து படுக்கைக்கு போக எண்ணியபோது உருவம் ஒன்று யன்னலை தாண்டிப் போவது தெரிந்தது. கூர்ந்து பார்த்த போது அவனை இந்த தீவுக்கு கொண்டு வந்த பறவைதான் என்பது புரிந்தது. "என்னை கொல்லத்தான் இங்கே கொண்டு வந்தாயா? வஞ்சித்துவிட்டாயே." ஆனந்தன் கூறியது அந்தப் பறவையின் காதெட்ட, சிறிது நேரம் அங்கேயே நின்று மறைந்தது.

நடு நிசி.

பூட்டிய கதவு திறக்கும் ஓசை.

நன்றாகத் தூங்குபவன் போல நடித்தான்.

ஒருவன் உள்ளே வந்தான். தான் கொண்டு வந்த சிறிய மெத்தையில் ஆனந்தனைத் தூக்கி படுக்க வைத்தான் தலை வெளியே தெரியவிட்டு மெத்தையைச் சுறுட்டித் தோளில் போட்டு நடக்கத் தொடங்கினான். தலை, வந்தவனின் முதுகுப் பக்கமாக இருந்ததால் கண்விழித்து கைகள் இரண்டையும் சோர விரித்து, கும்பகர்ணண் தூங்குவதைப் போலப் பாவனை செய்து பின் வெளிச்சத்தில் போகுமிடத்தை அவதானித்துக் கொண்ட ஆனந்தனுக்கு தான் இப்போது கடலுக்குள் கொண்டு வரப்பட்டதும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு வந்தவனது இடுப்பு வரை நீர் உயர்ந்து வந்ததும் நிலா ஒளியில் தெரிந்தது.

இடுப்பளவு நீரில் ஆனந்தனோடு போய் கொண்டிருந்தானென்றால் இரண்டரை அடி ஆழமான நீரில் என்று எண்ணிவிடாதீர்கள்? குறைந்தது ஒன்பது பத்தடி ஆழமுள்ள நீரில் என்பதை மனதில் பதித்துக் கொள்ளுங்கள்.

பகல் வேளை ஆனந்தன் பார்த்திருக்க வெட்டி வீழ்த்தி அரிந்து இரண்டு பாதிகளான பெரும் பழத்தின் பாதி ஓடு ஒன்று நீரில் நீந்திக் கொண்டிருந்தது.

ஓட்டின் உட்புறம் ஆனந்தன் படுக்க வைக்கப்பட்டான். இந்த நேரத்திலும் தான் தூக்கமின்றி இருப்பதாக ஆனந்தன் காட்டிக் கொள்ளவில்லை.

தூக்கத்தில் இருப்பது போல பாசாங்கு செய்த ஆனந்தன் சிறிது நேரம் கழித்து மெல்ல கண்களை திறந்தான், தான் தனிமையில் விடப்பட்டதை உணர்ந்தான்.

ஓட்டின் விளிம்பினை பிடித்து எழுந்து அமர்ந்தான். வானத்தில் பூரண சந்திரனும் கண் சிமிட்டும் வெள்ளிகளும் தெரிந்தன.

“பயத்தை நீக்கு, பயணத்தைத் தொடர், வெற்றி கிட்டும் விரைவில்” என்று சந்திரன் ஆசீர்வதிப்பது போலத் தோன்றியது.

“இனிமேல் நான் எதற்கும் பயப்படப் போவதில்லை. எப்படியும் ஏதோ ஓர் கரைபோய் சேர வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிசயத்தீவின் மர்மத்தை அரசு அறிய வேண்டும். அங்கே குவிந்திருக்கும் தங்கம் தனியுடமை ஆகாது மக்களுக்கு பயன்பட வேண்டும். இது எனது இலட்சியம்."

ஆகாயத்தைப் பார்த்தான். "சந்திரனே நீ என்னை காக்க வேணும்" என்றான். சந்திரனை மூடி இருந்த முகில் சம்மதம் தெரிவிப்பது போல விலகியது. "கடலன்னையே எனக்குத் துன்பம் செய்துவிடாதே." இரு கரங்களையும் குவித்து கடலைப் பார்த்து வணங்கினான்.

உயர்ந்து பதிந்து வீசிய அலைகள் அமைதியாக வீசின.

வடக்கிலிருந்து தெற்கே காற்று வீசிக் கொண்டிருந்தது.

ஆனந்தன் அமர்ந்து இருக்க ஓடு மெல்ல மெல்ல தெற்கு நோக்கி நகரத் தொடங்கியது.

அவன் பயணம் செய்த ஓட்டை இனிமேல் வட்டத் தோணி என்று சொல்லுவோம்.

வட்டத்தோணி அமைதியாகப் போய்க் கொண்டிருந்தது. சந்திரனும் மேற்கில் மறையும் நேரம் நெருங்கிக் கொண்டிருக்க பச்சா என்ற பறவை விரைந்து வந்து ஆனந்தனின் தோணியைச் சுற்றியது. அவனுடைய நெஞ்சு திக்கென்றது. "மீண்டும் என்னை தூக்கிக் போகவோ கொல்லவோ?"

தோணியில் அட்டையாய் சுறுண்டு படுத்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6

நேரம் பின்னிரவு இரண்டு மணியைத் தாண்டி இருக்கும். வானம் முகில்களின்றி வைரம் பதித்த நீலப் பெரு வெளியாகத் தோன்றியதொன்றும் ஆனந்தனுக்கு தெரியவில்லை.

பச்சா தன்னை என்ன செய்து விடப்போகிறதோ என்னும் ஏக்கத்தில் கால்களை மடித்து முழங்கால்களை தனது வாய்வரை இழுத்து மேலும் சுறுண்டு மெத்தையை இழுத்து மேனியை மூடினான். பச்சா வட்டத் தோணிக்கு மேல் அந்தரத்தில் நின்று சிறகடிப்பதை உணர்ந்தான். "ஆனந்தன் பயப்படாதே. எழுந்திரு, உன்னை காப்பாற்றவே வந்திருக்கிறேன் பயப்படாதே." பெற்றதாய் தன் பிள்ளையுடன் பாசத்தோடு பேசுவது போலப் பேசிற்று பச்சா.

தன்னை, தானே மூடிய மெத்தையை விலக்கி மெல்லத் தலை உயர்த்திப் பார்த்தான் ஆனந்தன். கண்கள் பிதுங்கின.

"நெடுநேரம் நான் உன்னோடு தங்கி நிற்க முடியாது ஆனந்தன். நின்று பேசக் கூடிய வசதி வாய்ப்பும் இல்லை. எவ்வளவு தூரம் வேண்டுமானாலும் என்னால் பறக்க முடியும். ஆனால் இந்த பாரமான உடலோடு அந்தரத்தில் நிற்க முடியாது" எனக் கூறித் தாழ்வாக வட்டத்தோணியை வட்டமிட்டபடி மேலும் கூறிற்று . "ஆனந்தன் இன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரவு நான் உன்னுடைய அறை யன்னலைக் கடந்த போது "என்னை கொல்லத்தான் கொண்டு வந்தாயா? வஞ்சித்து விட்டாயே" என நீ கூறிய வார்த்தைகளை கேட்டதும் அழுதுவிட்டேன். ஆனந்தன் நீ நம்பினால் நம்பு, நம்பாது விட்டால் விடு. நான் உன்னை வஞ்சிக்கவில்லை என் நெஞ்சில் மறைந்து கிடப்பதை செல்கிறேன் கேள்."

இப்போது ஆனந்தனுக்கு பச்சாவில் நம்பிக்கை ஏற்பட்டு மெத்தையை உதறி அதிலிருந்து வெளிப்பட்டு வட்டத் தோணி விளிம்பைப் பற்றியபடி அமர்ந்திருந்தான். பச்சா சுற்றிச் சுற்றிப் பறப்பதனை கவனித்த வண்ணம். "குமுதாவுக்கு நான் இங்கு வந்தது தெரியாது. தூங்கும் வரை பார்த்திருந்தேன் குமுதா தூங்கும் வரை உ.பா.கவைப் சுழற்றிச் சுழற்றிப் பார்த்துக் கொண்டே இருப்பார். கண் விழித்தால் தனது படுக்கைக்கு எதிராக வைக்கப் பட்டிருக்கும் உ.பா.கவைப் பார்ப்பார். அதனால் நான் ஒரு காரியம் செய்துவிட்டு வந்திருக்கிறேன் உ.பா.கவில் எதுவுமே பார்க்க முடியாதபடி துண்டித்து விட்டேன். அவர் எழுந்திருப்பதற்கு முன்னர் நான் போய் சீர்ப்படுத்தியாக வேண்டும்.

"உனக்கு சில நாட்களுக்கு போதுமான தேவையான சிலவற்றை கொண்டு வந்திருக்கிறேன்" எனக் கூறி தனதிரு கால்களாலும் பிடித்திருந்த நீண்ட மூடை ஒன்றைப் வட்டத் தோணியில் போட்டது. "எனக்கு நேரமாகிறது சுருக்கமாகச் சொல்கிறேன். உனக்கு எந்த ஆபத்தும் நேராது, இப்படியே தெற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கி போய்க் கொண்டே இரு. சிறிய தீவொன்று தென்படும். அந்தத் தீவில் இறங்கு. கரையில் ஒரு பெரிய ஆலமரம் நிற்கிறது. அதில் ஏறியிருந்து புல்லாங்குழலை வாசி புல்லாங்குழலின் இசை கேட்டதும் ஒருவர் வந்து உன்னைத் தனது இருப்பிடம் அழைத்துச் செல்வார். பெரியவர் ஒருவர் அங்கே இருப்பார். விவரங்கள் எல்லாம் உனக்கு சொல்லுவார். நீ நினைப்பது வெற்றிகரமாக முடியும், நான் போய் வருகிறேன் விடிந்துவிட்டால் நான் ஆபத்தில் மாட்டிக் கொள்ள நேரும்.'' பச்சா அவனிடமிருந்து எந்த பதிலையும் எதிர் பாராது பறக்கத் துவங்கியது.

பச்சா கூறியதெல்லாம் ஆனந்தனுக்கு புதிராகவே தோன்றியது. ஆரம்பமும் முடிவுமில்லாது எதை எதையோ எல்லாம் சொல்லி விட்டுப் போகிறதே என்று குழம்பினான். ஆனால் பச்சா தன்னை வஞ்சிக்கவில்லை அதிசயத் தீவின் மர்மங்களெல்லாம் பச்சாவுக்கு விளங்கும் என்பதைப் புரிந்து கொண்டான்.

காற்றுக் கொஞ்சம் பலமாக வீசியது. வட்டத்தோணி காற்றின் வேகத்திலும் அலைகளின் வீச்சிலும் உயர்ந்தும் பதிந்தும் தெற்கு நோக்கிப் போய்க் கொண்டிருக்க பச்சா இறக்கி வைத்த மூடையைப் பிரித்தான் ஆனந்தன்.

அதிலிருந்தவற்றைப் பார்த்ததும் அவனுக்கு ஆச்சரியமும் ஆனந்தமும் ஏற்பட்டன.

அங்கே அவன் அணிந்து கொள்ள உடுப்புகள், ஒரு வாரத்திற்கு போதுமான உணவுகள், படுக்கை விரிப்பு, குடிபானம், தண்ணீர், தலையணை, போர்த்திக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ள போர்வை, தோணியை விரைவாக செலுத்த வலிபலகை, முக்கியமான தொன்று அவனைக் கடலில் தூக்கிய போது அவன் மறதியில் விட்டு வந்த புல்லாங்குழல்! புல்லாங்குழலைக் கண்டதும் அவனது கண்கள் பனித்தன. இரு கரங்களாலும் எடுத்தேந்தி கண்களிலொற்றி முத்தமிட்டான். "பயத்தில் உன்னை எடுத்து வர மறந்துவிட்டேன் என் உயிரே, என்னை மன்னித்துவிடு" மார்போடு அணைத்துக் கொண்டான்.

தோணி போய்க் கொண்டே இருந்தது. தனக்கு சாதகமாக வீசிய காற்றுக்கு நன்றி சொன்னான். வாயு தேவனை வணங்கினான். பச்சா போன திசை பார்த்துக் கைகூப்பினான்.

"பச்சா உன்னை நன்றாக புரிந்து கொள்ளாமல் குறை கூறிவிட்டேன். உன் செயல்களொன்றும் எனக்குப் புரியவில்லை பறவையான உனக்கும் எனக்கும் ஏதோ தொடர்பு இருக்கிறது என்று நினைக்கிறேன். சிறிய தீவு என்றாய், ஆலமரம் என்றாய், புல்லாங்குழல் வாசிக்கச் சொன்னாய், பெரியவர் என்றாய் விவரங்கள் எல்லாம் அங்கே தெரிய வரும் என்றாய் எனக்கு எல்லாமே சிதம்பரசக்கரமாக இருக்குப் பச்சா. இனி உன் சொற்களுக்கு பணிந்துதான் செயற்படுவேன்."

வெள்ளிகள் ஒவ்வொன்றாக ஒளியிழக்கத் தொடங்கின. சந்திரனும் பதிந்து போவது தெரிந்தது. கீழ்வானம் சிவக்க ஆரம்பித்தது அங்கே செந்நிற ஒளி பரந்தது. அந்தத் திசையினை பார்த்தபடி இருந்தான் ஆனந்தன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மாவோ! இப்படியொரு அழகா! இந்தக் காட்சியைக் காணும் வாய்ப்பு எல்லோருக்கும் கிடைக்குமா? நேற்றுவரை தான் கண்டிராத அழகை ரசித்துக் கொண்டிருந்தவனை நித்திரா தேவி அணைத்துக் கொண்டாள்.

சில மணி நேரம் தூங்கிக் கிடந்தவன் துடித்துப் பதைத்துக் கண் விழித்தான். நேரம் காலை ஒன்பது மணி வரையில் இருக்கும் என நினைத்தான்.

பசி வயிற்றைப் பிறாண்டியது.

பச்சா வைத்துப் போன உணவுப் பொட்டகத்தைப் பிரித்துப் பார்த்தான் பால், பழம், பலவகைப் பலகாரங்கள் கண்டு மலைத்தான். பச்சாவுக்கு நன்றி சொல்லிக் கொண்டே வயிற்றை நிரப்பினான். படுத்தான் கண்ணயர்ந்து போனவன் விழித்த போது சூரியன் உச்சிக்கு வந்திருந்தது. ஆனால் அவனுக்கு மட்டும் சூரியனின் வெப்பம் தாக்காதபடி ஒன்றன் பின் ஒன்றாக முகில்கள் ஓடிக்கொண்டிருந்தன. இயற்கை தனக்குச் செய்து கொண்டிருந்த உதவிகளை நினைத்து வியந்தான்.

தோணி தானாகவே தெற்கு நோக்கி போய் கொண்டிருந்தது. எந்தக் கரையும் கண்ணுக்கு தெரியவில்லை.

"இன்னும் எத்தனை நாள் எடுக்குமோ கரை காண?"

சூரியன் தனது பணியை ஒழுங்கு தவறாது செய்து கொண்டிருந்தது. இரவு வந்தது. அதே கடல்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிது தேய்ந்த அதே சந்திரன், அதே வானம், அதே விண்மீன்கள்.

புல்லாங்குழலை எடுத்து வாசித்துக் கொண்டிருந்தான்.

சமுத்திரத்தில் ஏதோ சலசலப்பு.

துள்ளிப் பாய்ந்து தோணியை நெருங்கியது ஒரு மீன் கூட்டம். அதனைச் சுற்றிச் சுற்றி சில நீந்தின சில துள்ளி விழுந்தன, சில துள்ளிப் பாய்ந்தன. "அவையால் ஆபத்து உண்டாகுமோ? ஒன்றிரண்டு தோணியில் பாய்ந்தால் தோணி தூள்தூளாகி விடுமே? என் நிலைமை? என் நிலைமை? தோணியை புரட்டி விட்டால்? என்னை விழுங்கி விடும் அளவிற்கு நீளமாயும், பருமனாயுமல்லவா இவை தெரிகின்றன....."

சிறிது நேரத்தில் வந்த கூட்டம் அமைதி கொண்டது. தோணியை சுற்றி மெல்ல நீந்திக் கொண்டிருந்தது. முன்பிருந்த வேகத்தை விட மீன்கள் வந்த பின்னர் தோணி விரைந்து போய்க் கொண்டிருந்தது மீன்கள் தாம் தோணியைத் தள்ளிப் போகின்றனவோ?

உண்மை அது தான். அவைதான் சுற்றி நீந்தி தோணியைத் தள்ளி போகின்றன.

"எனக்கு உதவுவதற்கு வந்திருக்கின்றன. யாருக்குத் தான் நன்றி சொல்ல?"

ஆனந்தன் டொல்பின்களைப் பற்றிக் கேள்விப்பட்டிருந்தானே தவிர நேரில் பார்த்ததில்லை. புத்தகங்களில் படங்கள் பார்த்திருக்கிறான்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“கறுப்பும் வெள்ளையுமான இவைகள் நிச்சயமாக டொல்பின்கள் தான்.”

டொல்பின்கள் மக்களுக்கு நன்மை செய்பவை என்பது ஆனந்தன் அறிந்த சங்கதி.

தனக்கு உதவிக்கு வந்திருக்கும் டொல்பின்களுக்கு எப்படி நன்றி சொன்னாலும் அவைகள் விளங்கிக் கொள்ளக் கூடியனவா? பச்சாவின் பலகாரங்களின் நினைவு வந்தது. அள்ளியெடுத்தான். ஒவ்வொன்றாக எடுத்து டொல்பின்களின் முகத்தருகே நீட்டினான். பத்துக்கு மேற்பட்ட டொல்பின்களும் வாயை திறந்து வாங்கி விழுங்கின.

ஆனந்தனுக்கு பெரும் மகிழ்ச்சி, டொல்பின்களுக்கும் தான்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7

**கி**ழக்கு வெளுக்கத் துவங்கியது.

டொல்பின்களின் உதவியுடன் தோணி விரைந்து கொண்டிருந்தது.

தென்பகுதியில் கருமை தெரிந்தது ஆனந்தனுக்கு. ஆம் தோணி கரையை அண்டிக் கொண்டிருந்தது. மரங்கள் செடிகள் தெரிந்தன. பறவைகளின் ஆரவாரம் கேட்டது. ஆனந்தனின் உள்ளம் மகிழ்ச்சியில் துள்ளியது. "என் அருமை டொல்பின்களே !கரைக்கு வந்துவிட்டோம் என்னை நீங்கள் நான் வரவேண்டிய தீவுக்கு கொணர்ந்து சேர்த்து விட்டீர்கள்." உரத்துக் கூறினான்.

தோணி தரை முட்டி நின்றது.

பார்வை பெற்ற குருடனாய் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட பின் விடுதலை கிடைத்த கைதியைப் போல மகிழ்ந்தான் ஆனந்தன்.

துள்ளிப் பாய்ந்து நிலத்தில் கால் பதித்தான். டொல்பின்கள் ஒன்று கூடி ஆனந்தனை பார்த்து நின்றன.

"நண்பர்களே! நீங்கள் பேசத் தெரியாதவர்கள். உங்களுக்கு நன்றியை எப்படி தெரிவிப்பதென்று எனக்கு விளங்கவில்லை, உங்களை விட்டுப் பிரியவும் மனம் இடம் தருவதாயில்லை, என்ன செய்யட்டும். நீங்களே சொல்லுங்கள்" கைகள் கூப்பியபடி டொல்பின்களைப் பார்த்து நின்றான்.

டொல்பின்கள் தமது தலை உயர்த்தி அவனைப் பார்த்துப் பின் நீரில் மூழ்கி மறைந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கால்மணி நேரம் வரையில் கடலைப் பார்த்து நின்றான் "அம்மா கடலன்னையே! ஒரு சிறு துன்பம் கூட எனக்கு நேராது கரை சேர்த்துவிட்டாய்." சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கினான். மெல்ல எழுந்து வட்டத் தோணிக்கு வந்து தனது புல்லாங் குழலை எடுத்துக் கரை வந்தான்.

பச்சா கூறியது போல், விழுதுகள் பல விழுத்தி கிளைகள் பரப்பி நின்றதோர் பெரிய ஆல விருட்சம். விழுதுகளை பிடித்து மரத்தில் ஏறினான்.

புல்லாங்குழல் இசை காற்றில் கலந்தது. அங்கே மேய்ந்து கொண்டிருந்த பசுக்கள் மேய்வதை நிறுத்தி அசைவற்று நின்றன.

தீவைப் பார்த்தபடி அவன் வாசித்துக் கொண்டேயிருந்தான்.

தூரத்தில் யாரோ குதிரை மீதேறி வருவது கண்களில் பட்டது. அவர் எங்கும் திரும்பாது நேராக ஆலமரத்தையே நோக்கி வந்து கொண்டிருந்தார்.

ஆனந்தன் வாசித்துக் கொண்டே இருந்தான்.

ஆலமரத்தின் கீழ் குதிரையை நிறுத்தி இறங்கினார் வந்தவர். மேலே பார்த்தார் "உன் பெயர் என்ன?" வினவினார். வாயிலிருந்து புல்லாங்குழலை எடுத்துச் சொன்னான், "ஆனந்தன்."

அவருடைய முகம் மலர்ந்தது "மெள்ள இறங்கு, பக்குவம் பக்குவமாய் இறங்கு."

இறங்கிய ஆனந்தன் வந்திருந்தவரை காலிலிருந்து தலைவரை ஒருவித வியப்போடு பார்த்தான்.

என்ன பார்க்கிறாய்?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"..........."

"உன்னைத்தான் கேட்கிறேன், என் முகத்தில் அப்படி என்ன இருக்கிறது நீ பார்ப்பதற்கு ?"

"..........."

அவர் சிரித்தார், "ஆனந்தன்!"

ஆனந்தன் தன் வாயில் விரல் வைத்து கடித்தான்

"ஏன் விரலைக் கடிக்கிறாய்?"

"நான் இரண்டு நாட்கள் தூங்காது இருந்ததால் இப்போது தூக்கத்தில் இருந்து கனவு காணுகிறேனா என அறிவதற்காகவே எனது விரலைக் கடித்தேன்."

"ஏன் விரலைக் கடித்தாய்? உனக்கு என்ன விளங்கியது?"

"நான் தூங்கிக் கொண்டிருக்கவில்லை என்பது புரிந்தது. நீங்கள் யார் என்று கேட்க வேண்டும் என்று எண்ணம் விரிந்தது. என் அப்பாவா நீங்கள்? எனக்கு என் அப்பா இங்கே வரக்கூடிய வாய்ப்பு இல்லை என்பது தெட்டத் தெளிவாகத் தெரிகிறது. என் அப்பாவைப் போல இருக்கும் நீங்கள் யார் என்பதைச் சொல்ல வேண்டும்."

அவர் புன்னகைத்தாரே தவிர பதில் சொல்லவில்லை.

"சில நாட்களாக நடப்பதெல்லாம் நம்ப முடியாதவையாகவே இருக்கிறன. என்னையே நான் நம்பமுடியாது இருக்கிறது. தயவுசெய்து நீங்கள் யார் என்பதைச் கூறுங்கள்."

"நான் உனது அப்பாவல்ல ஆனந்தன். உன் அப்பா பெயர் சுந்தரன்..... இல்லையா?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“சுந்தரன் தான்.”

என் பெயர் இந்திரன். இப்போது நீ என் கூட வா வீட்டுக்குப் போவோம். இருவரும் குதிரையில் போவோம் .”

சில நிமிட நேரம் நிலம் பார்த்து நின்றான் பின்னர் சொன்னான். “போவோம்.”

தனது தோளில் தொங்கிய துணியினாலான பையிலிந்து குடுவை ஒன்றை எடுத்தார் இந்திரன். “இதில் பசுப்பால் இருக்கிறது, தேன் கலந்தது குடி களைத்துச் சோர்ந்து இருக்கிறாய், இதைக் குடித்தால் உடல் சோர்வு பறந்து விடும்.”

குடுவையை வாங்கி இந்திரனின் முகத்தில் ஒரு பார்வை பதித்துப் பருகினான் ஆனந்தன்.

“போவோமா?”

“போகலாம்....... நான் வந்த தோணியில் சில சாமான்கள் இருக்கின்றன.....” என இழுத்தான்.

“இருக்கட்டும், இங்கே யாரும் எடுக்கமாட்டார்கள் பின்னர் வந்து நான் எடுக்கிறேன், உன் குழலை மட்டும் கையில் வைத்துக் கொள்.”

இருவரையும் ஏற்றிச் சென்ற குதிரை கனதியான மரப்பலகைகளை சுவர்களாகக் கொண்டு புற்களால் வேயப்பட்ட பெரிய வீடடின் முன் நின்றது.

எண்பது வயது மதிக்கக் கூடிய, தலை முடி முழுமையாக பால் போன்ற நிறத்தினைக் கொண்ட நிமிர்ந்த நடையுமுடைய பாட்டி ஒருத்தி வீட்டிலிருந்து வெளிப்பட்டு முற்றத்துக்கு வந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உன்னுடைய பேரனைக் கூட்டி வந்திருக்கிறேன் அம்மா" என்றார் இந்திரன்.

"என்னுடைய பேரன் வந்து விட்டான், என்னுடைய பேரன் வந்து விட்டான்." வெண்மையான பற்கள் தெரிய மகிழ்ச்சியை வெளிப்படுத்தி ஆனந்தனை அணைத்து அவனுடைய கன்னத்தில் தனது கன்னத்தைப் பதித்தாள்.

"ஆனந்தனை கூட்டிப் போய் குளிக்கச் செய்து, உணவு கொடுத்து படுக்க விடுங்கோ அம்மா, கொஞ்சம் படுத்து உறங்கிய பின்னர் அவனோடு பேசலாம்."

நல்ல காற்றோட்டமான அறையில் தூங்கிக் கிடந்த ஆனந்தன் கண்கள் விழித்த போது சூரியன் மரங்களுக்கு இடையில் மறைந்து கொண்டிருந்தது.

சோம்பல் முறித்து முற்றத்துக்கு மெல்ல நடந்து வந்தான்.

அங்கே குவிந்த வெண்மணலில் அமர்ந்திருந்தனர் இந்திரனும் பாட்டியும். நீளவாக்கில் போடப்பட்டிருந்த மரக்குற்றியில், அதனருகே காய்களோடும் பழங்களோடும் நின்ற காட்டு மாமரத்தில் முதுகு சாய்த்து அமர்ந்திருந்தார் பெரியவர் ஒருவர். அவருடைய தலை முடியும் வெண்மையாய் இருந்தது. தாடி அவருடைய மடிவரை நீண்டு உடுத்தியிருந்த வேட்டியுடன் உறவாடியது.

ஆனந்தனைக் கண்டதும் "வாவா, உன் வரவை எத்தனையோ நாட்களாக எதிர் பார்த்துக் காத்திருந்தேன். அது இன்றுதான் கைகூடியது" எனக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறி இருகரங்களையும் நீட்டினார், ஆனந்தன் மூவரையும் மாறி மாறிப் பார்த்தான்.

அவனுடைய தயக்கத்தினை புரிந்து கொண்ட பெரியவர் "இங்கே வந்து எனக்கு பக்கத்தில் இருந்து கொள்" என்றார்.

அமர்ந்தவனை தன்னோடு அணைத்துக் கொண்டு சொன்னார் "உன் அப்பாவைப் போலவே இருக்கிறாய். எந்த மாற்றமும் இல்லை..... கடற்கரையிலிருந்து குதிரையில் உன்னைக் கொண்டுவந்தது யாரென்று தெரியுமா உனக்கு?"

"ஒன்றும் புரியேல்லையே" பெரியவரின் முகம் நோக்கிச் சொன்னான்.

"அவர் உன்னுடைய சித்தப்பா, உன் அப்பா சுந்தரனோடு கூடப்பிறந்தவர். அவர்கள் இருவரும் இரணைப் பிள்ளைகள்."

"என் மனதை குழப்புகிறீர்கள் என்று நினைக்கிறேன்."

"நீ குழம்பிப்போய் இருக்கிறாய் என்பது எனக்குத் தெரியும். எல்லாவற்றையும் சொல்லப் போகிறேன், கேள் அந்த அதிசயத்தீவு உனக்கே கிடைக்கப் போகிறது" என ஆரம்பித்துச் சொல்லத் தொடங்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8

**நா**ன் பிறந்தது வளர்ந்ததெல்லாம் இலங்கைத் தீவிலுள்ள மாத்தறையில், நீயுந்தான்.

நான் திருமணம் செய்தது, இங்கே இருக்கிறாவே உன் பாட்டியை. அப்போது எனக்கு நாற்பது வயது, பாட்டிக்கு முப்பத்தைந்து. நிலபுலங்கள் ஏராளம். தாராள வருமானம் சந்தோசமான வாழ்க்கை. இரட்டைப் பிள்ளைகள் பிறந்தார்கள். உன் அப்பாவும் சித்தப்பாவும், சுந்தரன், இந்திரன் எனப் பெயர் சூட்டினேன்.

இரவுவேளைகளில் என் கண்களுக்கு ஒரு தீவு தோன்றும். "அங்கே போ அங்கே போ" என்று யாரோ சொல்வது போலக் கேட்கும். தினமும் எனக்கிது பெரும் தொல்லையாக இருந்தது, படுக்கப் போனால் கண்களில் தெரிவது தீவுதான்.

இதனை பிறரிடம் கூறினேன். ஏதோ. மனக் குறைபாடு வைத்தியம் செய்யவேண்டும் என்றனர் சிலர். சிலர் "பேய் பிடித்து விட்டது" என்றனர். நாட்கள் செல்லச் செல்ல பெரும் கடலும், அங்கே போக வேண்டிய கடல்வழியும் தோன்றத் துவங்கியது.

நடப்பது நடக்கட்டும். போவதுதான் அந்தத்தீவிற்கு என்று துணிந்து விட்டேன். உன் பாட்டிக்கு சொன்னேன். பாட்டி கதறி அழுதாள் தடுத்தாள். தடுத்தென்ன அழுதென்ன? அந்தத்தீவு தோன்றி படாதபாடு படுத்திக் கொண்டிருந்தது. நிம்மதியாய் தூங்க முடியவில்லை. யார் தடுத்தாலும் படகொன்று விலைக்கு வாங்கிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போவதுதான் என்று முடிவெடுத்தேன். என்னைத் தனித்து விட உன் பாட்டி சம்மதிக்கவில்லை, தானும் என்னுடன் வருவதாக அடம்பிடித்தாள். கடலில் எத்தனையோ ஆபத்துக்கள் வரும் இறக்கவேண்டிய சந்தர்ப்பங்களும் ஏற்படும் என்று சொல்லித் தடுக்க முயன்றேன். "நான் பிள்ளைகளையும் எடுத்துத்தான் வருவேன், மாண்டால் எல்லோரும் ஒன்றாகவே மாண்டு போவோம்" என்றாள்.

வம்சம் தழைக்க சுந்தரனையாவது தன்னுடன் விட்டுப் போகும்படி கதறி அழுதாள் என் தங்கை. எனக்கும் அவள் சொன்னது சரியாகவே தோன்றியது.

என் தம்பி பட்சிநாதன் எங்களுடன் தான் வருவதாகச் சொன்னான், அவன் அஞ்சா நெஞ்சன் தனிக் கட்டை. பட்சிநாதன் யார் தெரியுமா ஆனந்தன்? எங்களைச் சந்திப்பதற்கு முன்னரே நீ அவனோடு பேசியிருக்கிறாய். அவன் உனக்கு உதவியிருக்கிறான்.

"பட்சிநாதனுடன் நான் பேசியிருக்கிறேனா? எனக்கு உதவி செய்திருக்கிறாரா? என்ன தாத்தா நீங்கள் சொல்லுகிறீர்கள்?"என் தம்பிதான் பட்சிநாதன் தான்" மீண்டும் சிரித்தார்.

"பட்சா என்ற பறவையல்லவோ என்னைத்தூக்கி வந்தது...... நீங்கள் சொல்வதை என்னால் நம்பமுடியவில்லைத் தாத்தா."

தன்னைத் "தாத்தா தாத்தா" என ஆனந்தன் சொல்லிக் கொண்டிருந்தது பெரியவருக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது. "அந்தப் பச்சாதான் என் தம்பி. அவன் எப்படிப் பறவையாக மாறினான் என்பதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் சொல்லுகிறேன்" எனக் கூறி மீண்டும் அவனை இறுக்கி அணைத்தார் பெரியவர்.

ஒரு மாதத்துக்கு தேவையான உணவுப் பொருட்கள் சமைத்து உண்ண சட்டி பானை பாத்திரங்கள் உடுபுடவைகள் சகலதோடும் என் மற்றுமொரு தங்கை மகள் தானும் என்கூட வரப்போவதாக கூக்குரலிட்டதால் அவளோடும் கிளம்பினோம்.

படகை என் தம்பி செலுத்திக் கொண்டிருந்தான். இந்துமகா சமுத்திரத்தில் பகலில் சூரியனையும் அலை வீசும் கடலையும் இரவில் நிலவையும் நட்சத்திரங் களையுமே கண்டோம். சில நாட்கள் ஓடி மறைந்தன "எந்தத்திசையில் போய்க் கொண்டிருக்கிறீர்கள்?" குறுக்கிட்டுக் கேட்டான் ஆனந்தன்.

"தெற்கு நோக்கி. ஒருபகல் சில தீவுகளைக் கண்டோம் "அது தான் நீங்கள் தேடி வந்த தீவா தாத்தா?" "இல்லை நாங்கள் பார்க்க வேண்டியது அந்தத் தீவல்ல என்று கண்டு கொண்டேன். இருந்தும் ஒரு பகல் அங்கு தங்கினோம். உலாவினோம். பின்னர் தான் தெரிய வந்தது அது மாலைதீவுவென்று...... கடல் பயணம் தொடர்ந்தது சில நாட்களில் என் மனக்கண்ணில் பதிந்திருந்த தீவு தென்பட்டது"

"அதிசயத்தீவை அடைந்துவிட்டீர்களா?"

"ஆமாம். இரவுகளில் நான் கண்ட அத்தனையும் அங்கே இருந்தன. இறங்கினோம் வீடு போன்ற சிறிய கல்மலை ஒன்று எமக்குத் தங்கி இருக்க வசதியாக இருந்தது. அந்த இடத்தை துப்பரவு செய்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கினோம். தீவைச் சுற்றிப் பார்த்தோம் பழங்கள் நிறை மரங்கள், நீரூற்று, பசுக்கள், பலவகைப் பறவைகள் முயல்கள் கண்டோம், அதுமட்டுமா? தீவு மத்தியில் தங்கமலை! நீண்டுயர்ந்த தங்கமலை.

"தங்கமலையா?" வாய் பிளந்தான் ஆனந்தன்.

தங்கத்தை நிலம் தோண்டி எத்தனையோ இழப்புகளுக்கு மத்தியில்தான் எடுப்பார்களாம். இங்கே தங்கமலை மிதந்திருந்தது. நிமிர்ந்திருந்தது!

தம்பி பட்சிநாதன் "கொஞ்ச தங்கத்தை வெட்டி எடுத்துக் கொண்டு ஊருக்குத் திரும்புவோமா அண்ணா? பரம்பரை பரம்பரையாக சுகமாய் சீவிக்கலாம்" என்று கேட்டான்.

"அதெல்லாம் வேண்டாம். திரும்பிப் போக எமக்கு அனுமதி இல்லைத் தம்பி" என்று கூறிவிட்டேன். பட்சிநாதன் மீன்கள் பிடிப்பான், முயல் பிடிப்பான்,மான்கள் கூடப் பிடிப்பான், பசுக்களை பிடித்து எம்மோடு பழக்கி பாலும் எடுத்தோம்.

சில ஆண்டுகள் ஓடி மறைந்தன.

இந்திரன் வளர்ந்து விட்டான்.

தங்கை மகளும் பெரியவளானாள். அவள் தான் இப்போது அதிசயத் தீவினை தனதாக்கிக் கொண்டிருப்பவள், பெயர் குமுதா.

"சுமார் பதினெட்டடி உயரத்தில் இருக்கும் அவரையா சொல்கிறீர்கள்?"

"அவள் என் தங்கை மகள் தான்" பெருமூச்சு விட்டார் பெரியவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீங்களெல்லோரும் சாதாரண உயரத்தில் இருக்கும் போது அவர் மட்டும் அந்த உயரத்துக்கு வந்ததெப்படி?"

"எல்லாம் உனக்குச் சொல்லத்தான் போகிறேன் ஆனந்தன். ஒரு நாள் மீன் பிடிக்கப் போன பட்சிநாதன் ஓடிவந்தான் யாரோ ஒருத்தன் அறிவுநினைவில்லாது கடல் கரையில் ஒதுங்கி கிடக்கிறான் என்று. அவனை தூக்கி வந்து எனக்குத் தெரிந்த வைத்தியங்கள் செய்தேன். மயக்கம் தெளிந்தான். தாங்கள் அவுஸ்ரேலியா நோக்கி பயனம் செய்த கப்பல் புயலில் சிக்கி எல்லோரும் மாண்டு போனார்க ளென்றும் ஒரு பலகையைப்பிடித்து கரை ஒதுங்கியதாகவும் எம்மோடு அந்தத்தீவில் இருக்கப் போவதாகவும் என் தயவு வேண்டினான். இருத்தினேன்.

குமுதாவுக்கு திருமணம் செய்து வைத்தேன். அன்று தான் எம்மை சனியன் பிடிக்கத் தொடங்கியது. குமுதாவை கூட்டி வந்தது முதலாவது குற்றம். யாரோ முன் பின் தெரியாதவனை அபயம் என்று வந்ததால் அணைத்தது இரண்டாவது குற்றம். திருமணம் செய்து வைத்தது மூன்றாவது குற்றம்....... குற்றம், குற்றம் செய்துவிட்டேன் ஆனந்தன்.

அவன் தங்கமலையை கண்டுவிட்டான் பேராசை கொண்டுவிட்டான். தன் உடமையாக்க எண்ணிவிட்டான்.

ஒருநாள் நள்ளிரவு ஏதோ இரைச்சல் எழுந்து பார்த்தேன். றொபேட்டைக் காணவில்லை. அது தான் குமுதாவின் கணவன் பெயர். மறுநாள் விடிந்தபோது தங்கமலைப் பக்கம் போன போதுதான் றொபேட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கமலையில் குந்தி இருப்பது தெரிந்தது. அவ்விடம் விரைந்தேன். அவனுடைய உள்ளங் கையொன்றில் நவரத்தினக் கற்கள், என் கண்ணைப் பறித்தன.

"இதெல்லாம் என்ன?" என்று கேட்டதற்கு அவன் சொன்ன பதில் எனக்கு ஆத்திரமூட்டியது. "நீங்கள் இந்த தீவிற்கு வந்து என்ன சுகத்தை அனுபவித்தீர்கள்? இருபது கிலோ வரையில் தங்கம் கொடுத்து இந்த நவரத்தினங்களை வாங்கினேன். இவ்வளவும் சில கோடிக்கு மேல் விலை போகும்.

"இதை இந்தத் தீவில் வைத்திருந்து என்ன செய்யப்போகிறாய்? தங்கத்தை யாருக்கு விற்றாய்?"

அவன் சிரித்தான். அந்தச் சிரிப்பு என்னை அவமதிப்பது போலத் தோன்றியது. "வேற்றுக் கிரகவாசிகளுக்கு கொடுத்தேன். நவரத்தினங்களை அள்ளித் தந்து போகிறார்கள். தங்கள் உலகத்தில் இந்தக் கற்களை கொண்டு வீதி அமைக்கிறார்களாம். தங்களுக்கு இயந்திரம் செய்வதற்கு தங்கம் வேண்டுமாம். வந்து வெட்டிக் கொண்டு போவார்களாம். மேற்கு நாடுகளில் இனிமேல் நானே முதல் பணக்காரன்." மீண்டும் சிரித்தான்.

"தங்கத்தை வெட்டிக் கொடுக்க உனக்கு யார் உரிமை தந்தது?" பொத்துக் கொண்டு வந்த கோபத்தில் கேட்டேன்.

"எனக்கு உரிமை தர யாருக்கு உரிமை இருக்கிறது? நான் நினைத்தால் உங்களைஎல்லாம் இந்தத் தீவிலிருந்து அகற்றிவிடுவேன், தெரியுமா?" என்றான் எழுந்து நின்று, கண்கள் கொவ்வைப் பழங்களாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9

புராணக் கதைகளில் கூறப்படுகின்ற சூரனைப் போன்ற உடலமைப்பு கொண்ட றொபேட்டால் என்றோ ஒருநாள் எமக்கு ஆபத்து வந்தே ஆகும் என நான் நினைத்தது நடந்து விட்டது.

"என்ன தாத்தா நடந்தது?"

அதைப் பின்னர் செல்கிறேன் கேள்.

றொபேட்டுக்கும் வேற்றுக்கிரகவாசிகளுக்கும், நன்கு முன்னேறிய வெளிநாட்டவர்களுக்கும் ஏதோ தொடர்பு இருந்தது எப்படி ஏற்பட்டது என்பது விளங்கவில்லை.

ஏதோ விமானம் போல ஒன்று அடிக்கடி வந்து போவது அறியக் கூடியதாக இருந்தது. சத்தம் மட்டும் கேட்கும் கண்டதில்லை. மறுநாள் விடிந்தால் தங்கமலையில் தங்கம் வெட்டப்பட்டிருந்த அடையாளம் தெரியும். எங்கள் அரசுக்கு உரிய சொத்தை அந்நியர் திருடிப்போவது எனக்கு ஆத்திரமூட்டியது. என்ன செய்ய? தடுத்தால் எமது உயிரை எடுத்து விடுவான் என்பது உண்மை.

ஒருநாள் எழுந்து பார்த்தபோது இரவிரவாக அரண்மனை போன்ற மாளிகை பாதிநிலையில் எழுந்திருந்தது, ஒருவார காலத்தில் கட்டுவேலைகள் முடிவுற்றது, அழகாகக் காட்சியளித்தது.

குமுதாவும் மகளும் அவனும் அங்கே குடியேறினர். நாங்கள் மலைக் குகையில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேட்டைக்குப் போன என் தம்பி நீண்ட நேரமாகியும் திரும்பவில்லை கவலை கொண்டிருக்க, ஒரு குருவி என் காலடியில் வந்து இருந்தது. அது பேசியது "அண்ணா நான் தான் உங்கள் தம்பி பட்சிநாதன்."

அதிர்ந்து போனேன். "என் தம்பியா நீ சிறிய பறவையல்லவா?"

"ஓம் அண்ணா வேட்டைக்கு போன நான் தங்கமலையில் அழகான பெரிய பறவை ஒன்றைக் கண்டு கல் எடுத்து அதனைக் கொன்று கறிசமைப்பதற்கு வீசி எறிந்தேன். "அடேய் பாவிமகனே!" என்று சத்தம் காதில் ஏறியது. ஓடிச் சென்று பார்த்தேன். ஒரு முனிவர் தலையிலிருந்து இரத்தம் வழிய தங்கமலையின் கீழ் நோக்கி உருண்டு கொண்டிருந்தார். அவரை தூக்கி எடுத்தேன். "தவம் செய்ய வந்த என்னை, ஒரு பறவைக்கு ஆசைப் பட்டு கொன்ற நீ பறவையாகக் கடவாய்" என்று சபித்து உயிர் துறந்தார் அண்ணா. நான் பறவையாகிவிட்டேன்" எனக் கண்ணீர் பெருகச் சொன்னான். அவனை தூக்கி எடுத்து ஆறுதல் சொன்னேன். ஆனால் என்மனம் ஆறவில்லை.

மறுநாள் பறவையாக மாறிய என் தம்பி என் தோளில் அமர்ந்திருக்க முனிவர் இறந்த இடம் போனோம். முனிவரின் உடல் இருந்த இடத்தில் ஒரு புதிய மரம் காய்கள் பழங்களோடு வளர்ந்து நின்றது, ஆச்சரியத்தைக் கொடுத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில நாட்கள் கழிய குமுதா அங்கே மலைக்கு போயிருக்கிறாள் அந்த மரத்தின் பழங்களைப் பறித்து வந்து மாளிகை கட்ட வந்தவர்களுக்கும் கொடுத்து தானும் உண்டிருக்கிறாள். உண்டதும் எல்லோரும் பதினெட்டடி உயரத்துக்கு மேல் வளர்ந்து விட்டார்கள்.

இதனை அறிந்த பட்சிநாதன் அதனோடு சேர்ந்த முந்நூற்றுக்கு மேற்பட்ட பறவைகளும் உண்டு இராட்சதப் பறவைகளாகின. பட்சிநாதன் தலைமையில் பறவைகள் இயங்கத் துவங்கி, அவைகளே அதிசயத்தீவிற்கு காவலராகின. பட்சிநாதனின் ஏற்பாட்டில். றொபேட் நெடுநாட்களாகத் தென்பட வில்லை. பெரிதாக வளர்ந்த பட்சிநாதன் பறவை அரசிக்கு நம்பிக்கைக்கு பொறுப்பானதாக நடித்து வருகிறது, நீ பச்சா எனச் சொல்லும் பட்சிநாதப் பறவை.

திடீரென தோன்றிய றொபேட் அவன் பழம் உண்ணாததால் முன்பு போல ஆறடி உயரத்திலே இருந்தான்.

"இப்போதும் அந்த அதிசயப் பழமரம் அங்கே நிற்கிறதா தாத்தா?"

"இவர்கள் பழம் பறித்ததும் அது இல்லாமலே போய்விட்டது."

ஒருநாள் காலை நானும் உன் சித்தப்பாவும் பாட்டியும் கண்விழித்த போது இந்தத் தீவின் கரையில் இருக்கக் கண்டோம். றொபேட்டும் குமுதாவும் எங்களுக்கு உணவில் மயக்க மருந்திட்டு இங்கே கொண்டுவந்து விட்டுப் போயிருக்கிறார்கள். எதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு வந்து சேர்த்தார்கள் என்பதெல்லாம் மர்மமாகவே இருக்கிறது ஆனந்தன்.

பகல் வரும், ஒருநாள் கழியும். நாட்கள் கழிந்தன, வாரங்கள் கழிந்தன. எத்தனை வருடங்களாக இங்கே இருக்கிறோம் என்று தெரியேல்லை.

ஆனந்தன் எழுந்து நின்றான். பெரியவரின் கையைப் பற்றினான். "இன்றோடு உங்கள் கவலைகள் அனைத்தையும் தூக்கி வீசுங்கள் தாத்தா. அதிசயத்தீவை றொபேட்டிடமிருந்தும் குமுதாவிட மிருந்தும் மீட்டெடுக்கும் பொறுப்பு உங்கள் பேரனான ஆனந்தனுடையது. தீவை அவர்களிடமிருந்து மீட்டு அரசாங்கத்திடம் ஒப்படைப்பேன். இப்படியான சொத்தெல்லாம் அரசுக்கு உரியதே. தனிநபர் ஒருவர் இப்படியானவற்றை அனுபவிக்க முடியாது, அனுபவிக்கவிடவும் கூடாது. ஒருவர் மட்டும் உயர்ந்து கொண்டு போக விட்டுப் பார்த்துக் கொண்டிருப்பதும் கோழைத்தனம் தாத்தா."

பெரியவர் வாய்விட்டுச் சிரித்தார், ஆனந்தனை பற்றி இழுத்துத் தன் மடிகொடுத்தார். அவனுடைய கன்னங்களை வருடினார். அவருடைய கண்களி லிருந்து கண்ணீர் பெருக்கெடுத்தது. அது ஆனந்தக் கண்ணீர்.

பெரியவர் தனது வரலாறு கூறிய நாள் தொடக்கம் ஆனந்தன் தீவைச் சுற்றத் தொடங்கினான். மரங்களின் கீழ் தனிமையில் அமர்ந்திருந்தான். தாத்தாவுக்கு கொடுத்த வாக்குறுதியை நிறை வேற்றியே ஆகவேண்டும் என உறுதி பூண்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடற்கரைக்கு வெளியே, ஒரு வயல் பரப்பளவில் நீர் நிற்பதைக் கண்ட ஆனந்தன்.சிலநாட்கள் போனபின்னர் அவ்விடம் போனவன் அங்கே நீர் நின்ற இடத்தில் உப்பு விளைந்திருப்பதைப் பார்த்தான்.

நீரில் விளையும் உப்பு நீரிலே கரைந்து போவதனை உணர்ந்தான்.

"அதிசயத்தீவில் அதிசயப் பழத்தை உண்டவர்களும் பறவைகளும் கற்பனைக்கே எட்டாத அளவிற்கு இராட்சத உடலைப் பெற முடியுமானால், அவர்கள் முன்பிருந்த நிலைக்குத் திரும்புவதற்கு எதாவது மருந்தோ மார்க்கமோ இருக்கத் தானே வேண்டும். முதலில் பட்சாவை சிறிய பறவையாக்க வேண்டும் அதிசயத்தீவைக் காவல் செய்யும் இராட்சதப் பறவைகள் முன்பிருந்தநிலைக்கு மாற்றினால் இலகுவாக அதிசயத தீவில் நுழைய வாய்ப்புக்கிட்டும். குமுதாவையும் மற்றவர்களையும் பழைய நிலைக்குக் கொண்டு வந்துவிட்டால் அதிசயத் தீவைக் கைப்பற்றுவது மிகச் சுலபம்."

எங்காவது தான் அறிந்து கொள்ளாத மரம் பழங்களோடு நிற்கின்றதா என மரங்களை அண்ணாந்து பார்த்துத் தேடினான். தேடி அலைந்தான். சிலமரங்களின் பழங்களைப் பொறுக்கி எடுத்து பெரியவரின் பசுக்களுக்கு அவர் அறியாது கொடுத்துப் பரீட்சித்துப் பார்த்தான்.

பயன் பூச்சியம்தான்.

தோல்வியைக் கண்டு துவளாது கருமத்திலே கண்ணாக அலைந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீவின் மையப்பகுதி அடர்ந்த காடாகத் தெரிந்தது. பெரு மரங்கள் பிண்ணிப் பிணைந்து நிழல் கொடுத்து நின்றன. நடந்து திரிந்த களைப்புத் தீர மரநிழலில் அமர்ந்தான். ஐந்து மான்கள் ஆறுதலாக நடந்து வந்தன. அங்கே உதிர்ந்து கிடந்த பழங்களை உண்டன. மான்களை ஒரு போதும் கண்டிராத ஆனந்தன் அவற்றின் அழகையும் மருட்சியையும் பார்த்து ரசித்திருந்தவன் துள்ளி எழுந்தான். காரணம் என்னவென்று நினைக்கிறீர்கள்? பழங்களை உண்ட மான்கள் ஐந்தும் மெல்ல மெல்ல சிறுத்து ஐந்தும் முயல்களின் அளவுக்கு சிறுத்துவிட்டன. ஆனந்தனின் மகிழ்ச்சியை விபரிக்க வார்த்தைகளே இல்லை.

ஒன்றையாவது பிடித்து விடலாம் என்னும் ஆசையில் துரத்தினான். அவைகள் உக்கிளான் என்னும் காட்டுப் பிராணிகள் போல் துள்ளிப் பாய்ந்து ஓடி மறைந்தன. உங்களுக்கு உக்கிளானைப் பற்றி சிறிது கூறுவது பொருத்தமாகவிருக்கும் என்று எண்ணுகிறேன். உக்கிளானும் காட்டு விலங்குதான் மான் போன்றது. ஆனால் புள்ளிகளில்லாதது. குறைகள் மெல்லிய அழகான கால்கள் உண்டு. இதனையும் வேட்டையாடுவார்கள்.

மான்களைப் பிடிக்க முடியாது போனாலும் பழங்களையாவது எடுத்துப்போய் தாத்தா வளர்க்கும் பசுவுக்குக் கொடுத்து பார்க்கலாம்" என நினைத்து எடுத்துப் போனான்

பழத்தை உண்ட பசு பெரியவரின் கண்முன்னே ஒரு நாய் அளவுக்குச் சிறுத்து நின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இந்த மரத்தின் இன்னும் பழங்கள் இருக்கின்றனவா?"

"ஏராளமாக"

"பழங்கள் அதிகம் தேவைப்படுமே அவற்றையெல்லாம் எப்படி அதிசயத்தீவிக்கு எடுத்துப் போவது? போய்ச் சேர நெடுநாட்கள் எடுக்கும், பழங்கள் பழுதடைந்து விடுமல்லவா?"

"அதற்கும் ஒரு உபாயம் இருக்குத் தாத்தா பழங்களை எடுத்து வந்து பிழிந்து சாற்றை எடுத்து குடுவைகளில் பக்குவப் படுத்துவோம்."

"நீ மகா வீரன்டா பேரா" என மகிழ்ந்தவர் சிறிது யோசித்துக் கேட்டார் "சாறு கெட்டுப் போகாதா?கெட்டுப் போனால் அங்கு போவது பயனற்றதாகி விடுமே...."

ஆனந்தன் சிரித்தான் "தாத்தா, இந்தத் தீவிலே வேண்டிய தேன் எடுக்கக் கூடியதாக இருக்கே. தேனைக் குடுவையில் சாற்றின் மேல் ஊற்றி விட்டால் எப்படி என் யோசனை?"

"நீ எங்கோ பிறக்க வேண்டியவன் என் பேரனாகப் பிறந்துவிட்டாய் பேரா" மகிழ்ந்து சிரித்தார் பெரியவர்.

"பேரன் வந்துவிட்டான் போலிருக்கே" பேச்சுக் குரல் கேட்டு இருவரும் திரும்பிப் பார்க்க, அங்கே உச்சந்தலையில் அள்ளிக் கட்டிய வெண்நிற கற்றைச் சடையும் நீண்ட வெண் தாடியும் கையில் தண்டு கமண்டலமுமாக ஒருவர் நின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“வரவேண்டும் சுவாமி வாருங்கள்” எனக் கூறி அவருடைய பாதங்களைத் தொட்டு வணங்கினார் பெரியவர். இருக்கை கொடுத்தார். “உனது பேரன் வந்திருக்கிறான் என்பது தெரிந்தே வந்தேன்” கூறியபடி அமர்ந்தவர் தொடர்ந்து கூறினார். முன்பொருபோது நான் வந்த வேளை உன் கவலை தெரிந்து, உன் பேரன் ஆனந்தன் என்னும் பெயர் கொண்டவன், உன் கவலைகளைப் போக்கவும் அதிசயத்தீவை மீட்கவும் வருவான் அரசு மெச்ச வாழ்வான் என உரைத்தேன் மறந்திருக்க மாட்டாய்.”

“இல்லைச் சுவாமி, நான் மறக்கவில்லை” கைகள் கட்டி நின்றார் பெரியவர்.

வந்தவர் பெரும் தவசிரேஸ்டர் என்பதைப் புரிந்து கொண்ட ஆனந்தன், அவரை விழுந்து வணங்கினான் “எழுந்திரு ஆனந்தா பெரும் பெரும் காரியங்களை சாதிக்கப் போகிறாய் நீ” என ஆசீர்வதித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10

நீண்ட நேரம் பேசிக்கொண்டிருந்த சாமியார் பால் பழம் உண்டு கிளம்பினார். "நான் கடலுக்குப் போகிறேன்."

"கடலுக்கா? இந்த இருட்டு வேளையிலா?" வியந்தார் பெரியவர்.

"பகலும் இரவும் எனக்கு ஒரேமாதிரித்தான்." நகைத்தார்

"நாங்கள் கூடவே வருகிறோம் துணைக்கு."மீண்டும் நகைத்தார்.

"துணை எனக்குத் தேவையில்லை விரும்பினால் வாருங்கள் நான் கடலில் இறங்கியதும் நீங்கள் திரும்பி விட வேண்டும்."

"அப்படியே"

கடலில் இறங்கித் துண்டு ஒன்றை நீர்மேல் விரித்தார் அதில் அமைத்தார் "அதிசயத்தீவுக்கு ஆனந்தன் எவ்வாறு போய் சேர்வது என்பதைச் சொல்வேன். ஆதவன் உதித்த பின் வாருங்கள் இப்போதே நீங்கள் போகலாம்."

அவர்கள் பார்த்திருக்க சாயியார் துணி மீது அமர்ந்த வண்ணம் வடக்கு நோக்கிப் போய்க் கொண்டிருந்தார்.

பொழுது புலர்ந்தது.

பெரியவரும் ஆனந்தனும் கடற்கரை வந்து சேர்ந்தனர். சாமியார் கரை நோக்கி வந்தவர் சொன்னார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“ஆனந்தனை மீனாக்கப் போகிறேன். அதிசயத் தீவுக்கு போகவும் அதனைக் கைப்பற்றவும் அதுதான் சிறந்த மார்க்கம்.”

“மீனாகவா?” அதிர்ந்து போனார் பெரியவர்.

“பயப்படாதே, மீனாகப்போவான் அங்கே மனிதனாக மாறுவான்.”

“எப்படி சுவாமி? என்மனம் கலங்குதே சுவாமி”

சுவாமி பதிலொன்றும் சொல்லவில்லை ஆனந்தனை நோக்கினார்.

“நான் சம்மதம் சுவாமி”

“அருகே வா”

வந்தான்.

“அமர்”

நிலமமர்ந்தான்.

“நான் சொல்வதைக் கவனமாகக் கேட்டுக் கொள்.”

அவனுடைய காதில் ஏதோ மந்திரம் உரைத்தார்.

ஆனந்தன் மீனாக மாறினான்

மீனிடத்தே ஏதோ சொன்னார். மீன் ஆனந்தனானது. பெரியவருக்கு வியப்பாக இருந்தது.

“இந்த மந்திரங்களை வீட்டுக்குப் போய் எழுதித் தருவேன் மனதில் பதித்துக் கொள்.”

“சரி சுவாமி எனது இலட்சியம் அதிசயத்தீவை அரசுடமை ஆக்குவதே. அதற்காக எத்தனை துன்பங்களையும் ஏற்கத் தயாராக உள்ளேன் சுவாமி.”

வீட்டு முற்றத்தில், சுவாமி உட்பட வீட்டார் கூடி நிற்க அமர்ந்திருந்து மந்திரத்தை உச்சாடனம் செய்தான் ஆனந்தன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீனானான். மீனின் வாலும் தலையும் ஆடின.

சில நிமிடத்தில் மீனானவன் ஆனந்தனாக எழுந்து சுவாமியை வணங்கினான்.

"உன் இலட்சியம் நிறைவேறும். சென்று வெற்றி கொண்டு, அங்கேயே இருந்து கொள். உன் தாத்தா பாட்டி, சித்தப்பா அங்கே உன்னிடம் வருவார்கள். மறந்தும் பட்சா என்னும் பட்சிநாதன் மட்டும் நீ எடுத்துச் செல்லும் பழரசத்தை உண்ண விட்டு விடாதே. ஏனென்றால் பட்சாதான் மீதமிருக்கும் காரியங்களை இராட்சதப் பறவையாகவிருந்து செய்து முடிக்க வேண்டும்." சுவாமி விடை பெற்றவர், திரும்பி ஆனந்தனைப் பார்த்தார். "கடலில் உனக்கு எந்த ஆபத்தும் வராது துணிந்து செல் கடலன்னையை வேண்டிக் கொள்வதற்காகவே இரவு கடல் நீரில் இறங்கினேன்."

பாட்டி, தாத்தா, சித்தப்பா மூவரும் ஆனந்தனை அனுப்பி வைக்க கடற்கரைக்கு வந்திருந்தனர். கடலில் இறங்கிய ஆனந்தன் தன்னை மீனாக மாற்றினான். மீனின் உடலில் பழரசம் நிரம்பிய இரண்டு குடுவைகளும் கட்டப்பட்டன. "போய் வருகிறேன் தாத்தா, போய் வருதுகிறேன் சித்தப்பா."

மறைந்தது மீன். நள்ளிரவு ஆனந்தன்மீன் அதிசயத்தீவுக் கரை அடைந்ததும் ஆனந்தனாக மாறியது. அந்தநடு நிசியிலும் காவல் பறவைகள் விழித்திருந்தமை தெரிந்து கொண்ட ஆனந்தன் பற்றையில் தன்னை மறைத்துக் கொண்டு கல் ஒன்றை எடுத்து உள்ளே வீசி எறிந்தான். தூரத்துப் பற்றையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழுந்தகல் "சர சர" என்னும் ஓசையெழுப்பியது. விழித்திருந்த சில பறவைகள் அங்கே பறந்து போக, சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி உள்ளே நுழைந்தான் ஆனந்தன். ஓசை வராத வண்ணம் பற்றையில் மறைந்து கொண்டான்.

பறவைகள் மரங்களுக்கு திரும்பி வந்தன. மெல்ல மெல்ல முன்னேறினான். காவலர்களைக் கண்காணிக்க பச்சா நடந்து வந்து கொண்டிருந்தது. "பச்சா."

பச்சா நின்றது. மீண்டும் "பச்சா" என்றான். ஆனந்தனின் குரலே எனப் புரிந்து கொண்ட பச்சா சிறகை விரித்து ஓசையெழுந்த பற்றையண்டை சென்றது. தவழ்ந்து வந்து பச்சாவின் கால்களுக் கிடையில் புகுந்து நிமிர்ந்து நின்றான் ஆனந்தன். சிறகுகளால் அவனை மறைத்து வேறோர் இடம் கூட்டிச் சென்று யாருடைய கண்களுக்கும் படாது அமரவைத்து உணவு எடுத்து வந்து கொடுத்து, தான் படுத்துக் கொண்டு தன் வால் பகுதியின் கீழ் அவன் படுத்துத் தூங்கச் செய்து விடியும் வரை அவனுக்கு காவல் செய்தது.

ஆனந்தன் வந்த காரணத்தை அவனிடமிருந்து அறிந்து கொண்ட பச்சா, "நல்ல சந்தர்ப்பத்தில் வந்திருக்கிறாய். நாளை நந்தினியின் பிறந்த நாள் கொண்டாட்டம் நடைபெறவுள்ளது. பலகாரம் எல்லாம் தயார்நிலையில். எல்லோருக்கும் பானம் வழங்கப்படும். நீ கொணர்ந்த பழரசத்தை பானத்தில் கலந்து எல்லோரும் ஒரே நேரத்தில் பருகச் செய்தால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தனை பேரும் பழைய நிலைக்கு ஒரே நேரத்தில் வந்து விட வெற்றிக் கொடி நாட்டி விடலாம்" எனக் கூறியது.

"பச்சா ஒன்றை மட்டும் நீ கவனத்தில் கொள்ள வேண்டும்."

"கூறு"

"அந்தப் பானத்தைப் நீ பருகினால் நீயும் சிட்டுக் குருவி போல் ஆகிவிடுவாய், மேற்கொண்டு என்னால் எதையும் சாதிக்க முடியாது போய்விடும். பருகி விடாதே."

"நான் என்ன பைத்தியமா பானத்தை பருக? "

சிறிய நேர அமைதிக்குப் பின், கண்களில் நீர் பெருக பச்சாவின் முன் வந்து கைகளை கூப்பினான்

"என்ன நடந்தது உனக்கு?" பச்சா கேட்டது.

"என்னை மன்னிக்க வேண்டும், என் தாத்தாவின் தம்பி நீங்கள். அந்த வகையில் நான் உங்களுக்கு பேரன் முறையானவன். பேரன் தாத்தாவை பெயர் சொல்லி அழைப்பது கூடாது தாத்தா."

"நீ சொல்லுவது சரிதான் ஆனந்தன். என்னைப் பெயர் சொல்லி அழைத்ததைப் பெரும் குறையா கவோ குற்றமாகவோ கருதவில்லை அதைவிடு."

கோலாகலமாக பிறந்தநாள் கொண்டாடப்பட்டது. காவல் பறவைகள் வட்டமிட்டு நின்று மகிழ்ச்சியில் சிறகு விரித்து ஆடின. ஆனந்தன் புல்லாங்குழல் வாசித்தவன்று வைக்கப்பட்டது போல பெரும் பெரும் தாம்பாளங்களில் பலகாரங்கள் வைக்கப்பட்டன, குமுதா, நந்தினி உட்பட பணியாளர்களும் காவல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பறவைகளும் உண்டு மகிழ்ந்து ஆர்ப்பரிக்க பானம் எடுத்து வரப்பட்டது. குமுதா பானம் பருகத் தொடங்கிய பின்னரே தாம் பருக வேண்டும் என எண்ணியிருந்தவர்கள் போல குமுதா பருக எல்லோரும் பருகினர்.

ஆவலோடு காத்திருக்க காவல் பறவைகள் தமது சொண்டுகளை அண்டாக்களில் நுழைத்துப் பருகின. ஆனந்தனால் கொண்டு வரப்பட்டு அவனால் பானத்தில் கலக்கப்பட்ட பழரசம் தன் திறமையைச் செய்யத் துவங்கியது. பறவைகள் எல்லாமும் சிட்டுக் குருவிகளாட்டம் குமுதாவின் கண்களுக்கு தெரிந்தன. தன் கண்களிலேதான் ஏதேனும் கோளாறோவென கண்களைக் கைகளால் கசக்கி மீண்டும் பார்த்தாள். சிட்டுக் குருவிகளாகவே தெரிந்தன.

"அம்மா ஏன் நீங்கள் சின்னதாகிவிட்டீர்கள்?" வினவிய நந்தினியைப் பார்த்தாள். அவளும் மூன்றே மூன்றடிக்கு குறுகியிருந்ததால் குமுதா தன்னைப் பார்த்தாள், சுளகில் பாவைப் பிள்ளை அமர்ந்திருப்பது போல் தான் அந்தப்பாரிய இருக்கையில் அமர்ந்திருந்தமை கண்டு வெட்கித்தாள். சட்டென்று மாளிகை நோக்கி விரைந்தாள்.

மைதானம் வெறிச்சோடியது. தாம் முன்பிருந்த தோற்றத்துச் குறுகிப் சிறுத்த காவல் பறவைகள் மட்டும் செய்வதறியாது மைதானத்தில் தத்தித் திரிந்தன.

மாளிகைக்கு விரைந்த குமுதா அதிர்ச்சி அடைந்திருந்தாள். அவர்களுடைய உ.பா.க நொறுக்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டிருந்தது. பணியாளர்கள் எல்லோரையும் அழைத்தாள். ஒன்று கூடினர். "என்ன நடந்து கொண்டிருக்கிறது? ஒன்றுமே புரியவில்லை" என அரற்றினாள்.

"எங்களுக்கும் தான்."

"இனிமேல் எமக்கும் காவல் இல்லை, தீவுக்கும் காவல் இல்லை."

"தீவு உங்களின் கைவிட்டு போகப் போகிறது, நாங்களும் சிறைப்பிடிக்கப்பட்டு கடலில் தள்ளப்படப் போகிறோம்."

"பச்சா எங்கே! எனது நம்பிக்கைக்குரிய பச்சாவும் சிட்டுக்குருவியாட்டம் சிறுத்துப் போனது துன்பத்தின் மேல் துன்பம்."

"பச்சா பக்கத்தறைக் கட்டிலில் எவ்வித பதற்றமும் இல்லாது அதே உருவத்தில் படுத்துக்கிடக்கிறது அம்மா." கூறிய நந்தினியின் கைபற்றி உள்ளே புகவிடாது வெளியே இழுத்த ஆனந்தன் அறைக்கதவை சடாரென்று சாத்திப் பூட்டினான். "இனிமேல் யாருமே வெளியேவர முடியாது. இவைக்கு இன்றிலிருந்து உண்ண உணவும் குடிக்க நீரும் கிடைக்கப் போவதில்லை நந்தினி."

நந்தினி விழிகள் பிதுங்க மலைத்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11

நந்தினியின் கையைப் பற்றியபடி பச்சா படுத்துக்கிடந்த அறைபுகுந்த ஆனந்தன் "எல்லாரையும் அறைக்குள் விட்டுப் பூட்டிவிட்டேன் பச்சா தாத்தாஅறைக்கதவை உடைத்து வெளியே வந்து விடுவார்களோ என்று அஞ்சுகிறேன்."

"இந்தப் பெரிய கதவை அவர்களால் உடைத்து வெறியேற முடியாது, நீ கவலைப்படாதே."

"ஆறியிருப்பது ஆபத்தாகவும் முடிந்துவிடும், ஆகவே அடுத்த திட்டத்துக்கு ஆகவேண்டியதைச் செய்ய வேண்டும் தாத்தா."

"அடுத்து என்ன செய்ய வேண்டும் என்று நினைக்கிறாய்?"

"அரசுக்கு அறிவித்து அவர்களை அழைத்து வந்து தங்கமலையையும் தீவையும் அவர்களிடம் ஒப்படைத்து நாங்கள் எல்லோரும் எமது ஊருக்குப் போகவேண்டும்." கண் கலங்கினான்.

"இன்று வேண்டுமானாலும் உனது அம்மா அப்பாவைப் பார்க்க உன்னை அழைத்துப் போக என்னால் முடியும் ஆனந்தன்."

"இன்று வேண்டாம் அரசாங்கத்திடம் தீவை காட்டாது போகச் சம்மதமில்லை. அரசாங்கத்திடம் எப்படிப் போவது என்று தான் தலையை உடைக்கவேண்டியிருக்கிறது."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நான் இருக்கும் போது நீ கவலைப்பட வேண்டியதில்லை ஆனந்தன். என் மேல் அமர்ந்துகொள் இந்த உலகத்தையே சுற்றி வருகிறேன்."

ஆனந்தனின் ஆனந்தத்தைச் சொல்லி முடிக்க முடியாது.

"அப்படியானால் இன்றே கிளம்புவோமா பச்சா தாத்தா?"

"இன்றென்ன? இப்போதே கிளம்புவோம்."

"நந்தினியை இந்த அறையில் விட்டு, நாங்கள் திரும்பி வரும் வரை அவளுக்கு வேண்டிய உணவு, குடிக்கத் தண்ணீர் மாற்றிக் கொள்ள உடுப்பு வேறு என்னென்ன வேண்டுமோ அனைத்தையும் கொடுத்து அறையையும் பூட்டிக் கிளம்புவோமா தாத்தா?"

"நான் தயார் வெள்ளைத் துணிக்கொடி ஒன்று எடுத்துவா."

பச்சாவில் ஏறி அமர்ந்தான் ஆனந்தன். பட்சா விரைந்து பறந்தது. கடல் மேல் பறந்து. காடுகள் மலைகள் மேல் பறந்தது. பெரும் நகரங்கள் மேல் பறந்தது, பரந்து உயர்ந்த கட்டிடம் ஒன்று தெரிந்தது. அதனை இருமுறை சுற்றிவர சீருடை தரித்தவர்கள் பலர் ஆயுததாரிகளாக அக்கட்டிடத்திற்கு வெளியே வந்தனர். ஆயுதங்களை கையேந்தி நின்றவர்களை கண்ணுற்ற பச்சா, "இதுதான் நாங்கள் தேடி வந்த இடம். இது தான் ஆனந்தன் அரசதர்ப்பார்" என அவனுக்கு கூறிப் பதிய, ஆயுததாரிகள் பச்சாவைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுட்டு விழுத்தும் நோக்கத்தில் போலும் துப்பாக்கிகளை மேல் நோக்கி பிடித்து குறிபார்த்தனர்.

அவர்களின் எண்ணத்தைப் புரிந்து கொண்ட பச்சா "ஆபத்தில் மாட்டிக் கொண்டு விட்டோம் ஆனந்தன்" எனக் கூறி மேலே மேலே உயர்ந்தது.

"இப்படி ஏதும் விபரீதம் நடக்கலாம் என நினைத்தே வெள்ளைத் துணி ஒன்று கொண்டு வரச் சொன்னீர்கள் என்பது இப்போது எனக்குப் புரிகிறது உங்களுடைய இராட்சத உருவத்தைக் கண்டு பயந்து விட்டார்கள் வேறொன்றுமில்லை. இப்போது தாழப் பறவுங்கள் நான் வெள்ளைத் துணியைக் காட்டுகிறேன்."

தான் கொணர்ந்த வெள்ளைக் கொடியை உயரப் பிடித்தபடி ஆனந்தன் இருக்க, பட்சா மெல்ல கீழே பதிய தர்ப்பாரின் முன்னிருக்கும் வெளியில் அழகுக்காக நடப்பட்டிருந்த பூஞ்செடிகளும் மரங்களும் பச்சாவின் இறகு வீச்சில் ஆடி அசைந்தன, கீழே உதிர்ந்து கிடந்த சருகுகள் பறந்தன.

வெளியான அந்த இடத்தில் பச்சா பதிந்து இறங்கிப் படுத்துக் கொண்டது.

ஆனந்தன் பச்சாவிலிருந்து மெல்ல இறங்கினான். சிப்பாய்கள் பச்சாவையும் ஆனந்தனையும் சுற்றி வட்டமிட்டு இருவரையும் குறிவைத்து நின்றனர்.

"நாங்கள் ஆபத்தானவர் அல்ல, ஆயுததாரிகள் அல்ல, நாட்டுக்கு நன்மை பயக்கும் நல்லதொரு செய்தியை அரசுக்கு அறிவிக்கவே வந்திருதக்கிறோம்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்ன செய்தி கொண்டு வந்திருக்கிறாய்?" அதிகாரி வினவினார்.

"உள்ளே போயிருந்து விளங்குவது நல்லதென்று நினைக்கிறேன்....... அதுவரை இந்தப் பறவை இவ்விடத்திலே நிற்கும்."

"நாம் அந்தப் பறவையைப் பார்த்ததுமே நிலை குலைந்து போனோம். இந்த மாதிரியான பறவை இந்த உலகத்தில் இருப்பதாகக் நாம் கேள்விப்படவே இல்லை...... வா உள்ளே போவோம்."

ஆனந்தனுக்கு இருக்கை கொடுக்கப்பட்டதோடு சில ஆயுததாரிகளும் அவனைச்சூழ்ந்து நிற்க வைத்தார் அதிகாரி. தான் வந்த காரணத்தைக் கூறக் கேட்ட அதிகாரி, "இத்தனை அதிசயங்களோடு ஒரு தீவு இருப்பதை நாங்கள் கேள்விப்படதே இல்லை, யாரும் போய்ப் பார்த்ததாகவும் இல்லை."

ஆனந்தன் சிரித்தான். "இன்னும் எத்தனையோ தீவுகள் மனிதரின் கண்களில் படாமலே இருக்கின்றன என நான் நினைக்கிறேன்."

அதிகாரி தலை கவிழ்ந்தார் "இரு-க்-கலாம்."

"எப்போது அதிசயத் தீவுக்கு வரவிருக்கிறீர்கள்?"

"நாளைக் காலை அரசவையைக் கூட்டி எல்லோருக்கும் தெரியப் படுத்தியவுடன் கிளம்பலாம்."

"நாங்கள் இப்போதே போகவிருக்கிறோம்."

"அதெல்லாம் முடியாது" சிரித்தார். "இன்று இரவு அரச விருந்தாளிகளாக இருவரும் இங்கே தங்கி நாளை காலை வேளை எல்லோருமாகப் புறப்படுவோம்" எனக் கூறிய அதிகாரி, அங்கே நின்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவனைக் கூப்பிட்டார். "வந்திருப்பவர்களுக்கு மிகவும் ருசியான விருந்து தயாராகட்டும்" என்றார்.

"வந்திருக்கும் பறவைக்கு என்ன உணவு தயாரிக்க வேண்டுமோ தெரியவில்லை ஐயா" என்றான் அவன்.

அதிகாரி ஆனந்தனின் முகத்தில் பார்வை செலுத்தினார். ஆனந்தன் சிரித்துச் சொன்னான் "எனது பறவையின் பசி அடங்க வேண்டுமானால் இங்கே சமைத்துக் கொடுப்பது சிரமமாக இருக்கும். அதனை நீ போய் சாப்பிட்டு வா என்று சொன்னால் அது கடலில் போய் இரண்டு சுறாக்களைப் பிடித்து சாப்பிட்டுத் திரும்பும்."

"ஒரு அரசு ஒரு பறவைக்கு உணவு கொடுக்கவா முடியாது? சோறும் கறியும் சமைக்க ஏற்பாடு செய்கிறேன்."

பெரிய பாத்திரமென்றில் சமைத்த சோற்றில் கறிகள் போட்டு கிளறி நால்வர் தூக்கி வந்து பச்சா முன் வைத்தார்கள். அவர்கள் வைத்ததுதான் தாமதம் சோற்றை உண்டு பாத்திரத்தை செண்டினால் தூக்கி அவர்கள் முன் வைத்தது பச்சா.

திகைப்படைந்த சமையலாட்கள் கேட்டார்கள் "இன்னும் கொண்டு வரவா?"

"கொண்டு வாருங்கள்."

இரண்டாவது பாத்திரமும் காலி!

"போதுமா?"

"அரை வயிறு நிரம்பிவிட்டது."

"இன்னும் கொண்டு வரவா பறவையாரே?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இருப்பின் கொண்டு வாருங்கள்"

சிப்பாய்களுக்காகச் சமைத்த உணவும் கொணர்ந்து வைக்கப்பட்டதையும் விழுங்கிவிட்டுப் பச்சா சொன்னது "ஓரளவுக்குப் போதும்."

மறுநாள் தர்ப்பார் கூடி முடிவெடுத்தது "தாமதமின்றி அதிசயத் தீவக்குப் போவது."

முந்நூறு ஆயுதம் தரித்த சிப்பாய்கள், அதிகாரிகள், நாலு பீரங்கிகள் ,உணவுப் பொருட்கள், பாத்திரங்களுடன், பச்சாவும் ஆனந்தனும் அமர்ந்திருக்க கப்பல் கிளம்பி கடல் நீரைக் கிழித்தபடி விரைந்தது.

அதிசயத்தீவை கப்பல் சேர்ந்ததும், அதிகாரிகளின் ஆணைப்படி சிப்பாய்கள் அதனைச் சுற்றி வளைத்து நின்றனர். பீரங்கிகள் ஆகாயத்தைப் பார்த்தபடி நிறுத்தப்பட்டன. கப்பல் தீவைச் சுற்றி ரோந்தில் ஈடுபட்டது.

மாளிகையைக் கண்டு மலைத்த அதிகாரிகளை தங்கமலை இருந்த இடத்திற்குக் கூட்டி வந்தனர் ஆனந்தனும் பச்சாவும். தங்கமலையைப் பார்த்ததும் அதிகாரிகளின் கண்கள் அகல விரிந்தன. அதனைச் சுற்றிச் சுற்றி ஆனந்தித்து மகிழ்ந்தனர். விழுந்து விழுந்து வணங்கினர். "உலகில் எங்குமே இப்படியொரு தங்கமலை இருப்பதாக நாங்கள் கேள்விப்பட்டதே இல்லை" எனக் கூறியபடி, ஆனந்தனைத் தூக்கி ஆனந்தத்தாண்டவம் ஆடினார் ஒரு அதிகாரி.

"அடுத்து உங்கள் நடவடிக்கை என்ன?" பட்சா அதிகாரிகளைக் கேட்டது.

"சிப்பாய்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட வேண்டும். இன்னும் சில பீரங்கிகள் இங்கே வந்தாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். எந்தநேரமும் தீவைச் சுற்றிச் சுற்றிப் பாதுகாக்க மேலும் ஒரு கப்பல் வேண்டும். இந்தத் தங்கத் தீவை எமக்கு அறிமுகம் செய்து வைத்த உங்களுக்கு உடனடியாக இருக்கின்ற தேவை என்ன? தயங்காமல் கூறுங்கள் தலைமேல் கொள்ள."

"அடுத்த தீவில் இருக்கின்ற தாத்தா, பாட்டி, சித்தப்பா ஆகியோரை நீங்கள் கப்பல் அனுப்பி அவர்களை இங்கே கூட்டிவருவதற்கு உதவவேண்டும்."

"தாமதமின்றி இக்கணமே அழைத்து வருவோம்." தாத்தா, பாட்டி, சித்தப்பா மூவரும் வந்திறங்கியதும் பாட்டி கேட்ட முதல் கேள்வி இது தான், "எங்கே ஆனந்தன் அந்த இராட்சசி குமுதா?"

"அறையுள் பூட்டி வைத்திருக்கிறேன் பாட்டி."

"என் கையாலே நான் அவளைக் கொல்ல வேண்டும்." பாட்டியின் கண்கள் செந்நிறமாக மாறின.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12

சூரியன் கடலில் குதிக்கத் துவங்கியதும் இருள் கவ்விப் பிடித்தது.

வித்தியாசமான இரைச்சல் கேட்டது.

சிப்பாய்கள் உசார் அடைந்தனர்.

இரைச்சல் கேட்டுக் கொண்டிருந்ததே தவிர இரைச்சலுக்குரிய சாதனம் எதுவென்று தெரிய வில்லை. எதுவுமே கண்களுக்குப் புலப்பட வில்லை. ஆனால் றொபேட் உட்பட ஐவர் தங்கமலையில் நிற்பதும் அவர்களின் கைகளில் தங்கம் வெட்டும் ஆயுதங்களும் தெரியவே சிப்பாய்கள் அவர்களை நெருங்கினர்.

“நீங்கள் யார்?” றொபேட்டின் குரல் உயர்ந்தது.

“நீ யார்?” சிப்பாய் ஒருவன் கேட்டான்.

“நான் இந்தத் தீவிற்கு சொந்தக்காரன்”

“நீ தான் எங்கள் நாட்டுத் தங்கத்தை வேற்றுக் கிரகத்துக்குக் கடத்துபவனா?” கேட்டுக் கொண்ட சிப்பாய் றொபேட்டை கைது செய்தான். அவனுடன் வந்தவர்களும் கைது செய்யப்பட்டனர். அவர்கள் அனைவரும் குமுதாவும் மற்றையோரும் இருந்த அறையில் தள்ளப்பட்டனர்.நந்தினி இருந்த அறைக்கு வந்தான் ஆனந்தன். றெபேட்டும் கூட்டாளிகளும் கைது செய்யப்பட்டதை அவளுக்கு கூறக் கவலைப்பட்டவளை இனிய வார்த்தைகள் பேசித் தேற்றினான். “நாளை அதிகாலை என் அம்மாவை அப்பாவை இங்கே கூட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர கப்பல் புறப்படுகிறது. நான் இலங்கைத் தீவுக்கு-மாத்தறைக்குப் போகிறேன் நீயும் என்கூட வா, போய் வருவோம்'' என்றான்.

அவள் அழுதாள் "நீங்கள் என்னைப் பெற்றவரை சிறை வைத்திருக்கிறீகள். எனக்கு மட்டும் உணவு வழங்கிப் போனீர்கள் அவர்கள் அன்ன ஆகாரமின்றிச் சோர்ந்து கிடக்கிறார்கள் நான் வரமாட்டேன்'' என மறுத்தாள்.

"அவர்கள் செய்த பெரும் தவறுகளை கப்பலில் போகும் போது உனக்குக் கூறுவேன். அதன்பின் என்னிலே நீ கோபப்படமாட்டாய் நந்தினி.''

ஆனந்தனில்அவள் கொண்ட அன்பினாலும் நம்பிக்கையாலும் அரை மனதோடு புறப்பட்டாள்.

அம்மா அப்பாவோடு சுற்றத்தார் சிலரோடும் அதிசயத் தீவிற்கு திரும்பி வந்தபோது மேடை அமைக்கப்பட்டு அலங்கரிக்கப்பட்டிருந்தது. ஆனந்தனுக்கு நவரத்தினக் கற்கள் பதிக்கப்பட்ட பட்டாடைகள் அணிவித்தார்கள் அரச அதிகாரிகள்.

"நந்தினியும் என்னருகே அமர்வதை விரும்புகிறேன். தன்னைப் பெற்றவர்கள் போலல்லாது மிகவும் நல்லவள் அவள். என்னைக் காத்தவள்'' என அதிகாரிகளுக்குச் சொன்னான் ஆனந்தன்.

சிப்பாய்கள் வந்து கூடினர்.

வாத்தியங்களின் ஒலி வானைப்பிளக்க ஆனந்தனும் நந்தினியும் மேடைக்கு அழைத்து வரப்பட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தாத்தா எங்கே? அவரையும் அழையுங்கள் ஏனென்றால் அவர்தான் இந்த அதிசயத் தீவைக் கண்டு பிடித்தவர்." ஆனந்தன் சொன்னான். அவரும் மேடையில் அமர்த்தப்பட்டார்.

அரச அதிகாரிகளும் மேடையில் அமர்ந்தனர்.

ஆனந்தன் எழுந்தான்.

"முதலில் றொபேட், அவருடைய மனைவி குமுதா, அடைக்கப்பட்டு இருப்பவர்கள், வேற்றுக் கிரகத்திலிருந்து வந்தவர்கள் அனைவரையும் விலங்கிட்டு இழுத்து வந்து இங்கே நிறுத்துங்கள்" என்றான்.

கைதிகள் விலங்கிட்டு இழுத்து வரப்பட்டனர்.

ஆனந்தன் மீண்டும் பேசினான்." இன்று இந்த நல்ல நாளிலே இந்த அதிசயத் தீவை அரசிடம் ஒப்டைத்து நாளைகாலை நாங்கள் எல்லோரும் ஊர் திரும்ப இருக்கிறேம்."

அரச அதிகாரி குறுக்கிட்டார் எழுந்து நின்று-

"ஆனந்தனும் அவருடைய குடும்பத்தினரும் இந்த அதிசயத் தீவை விட்டு வெளியேற நமது அரசு அனுமதிக்கப் போவதில்லை. ஆனந்தன் தனக்கு விருப்பமானவர்கள் எல்லோரையும் இங்கே அழைத்துவர நாங்கள் கப்பல் தருகிறோம். இங்கே இருப்பதற்கு வேண்டிய நிலமும் வீடுகளும் அமைத்துக் கொடுக்கவிருக்கிறோம். எல்லோருக்கும் எமது அரசு எக்காலமும் உணவுப் பொருட்கள் தேவையான பாத்திரங்கள், ஆடைகள், என்னென்ன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டுமோ அனைத்தும் வழங்கும். எமது சிப்பாய்கள் தங்கமலைக்கு காவலர்களாக தீவில் இருப்பார்கள்.

கரகோசம் வானை எட்டியது.

பெரியவர் எழுந்து நின்றார். “எம்மை மயக்கமடையச் செய்து தனித் தீவில் விட்டு வந்த குமுதா அவள் கணவன் றொபேட்டுக்கும் அவனோடு சேர்ந்தவர்களுக்கும் என்ன தண்டனை கொடுக்கலாம் என்று சொல்லவில்லையே. அவன் எம்மை யாருமற்ற தனித்தீவில் விட்டது மட்டுமல்ல அவனும் அவளும் சேர்ந்து வேற்றுக்கிரகத்தினருக்கு எமது தங்கத்தை கடத்தியது மன்னிக்க முடியாத குற்றம்.”

“என்ன தண்டனை கொடுக்க வேண்டும் என்பதை நீங்களே சொல்லுங்கள் பெரியவரே.”

“மரணதண்டனை கொடுக்க வேண்டும். ஆனால் மன்னிப்போம். அவர்களும் நாம் அனுபவித்த துன்பங்களை அனுபவிக்க, நாங்கள் இருந்த தீவிற்கே அனுப்பிவிடுங்கள்.”

சிறைப் பிடிக்கப்பட்ட அனைவரையும் பெரியவர் வாழ்ந்த தீவுக்கு ஏற்றிச் செல்லக் கப்பல் தயாரானது.

மேடையிலிருந்த அரச அதிகாரி, ஆனந்தனுக்கு மாலை அணிவித்து, “ஆனந்தனை போன்ற துணிவும், நேர்மையும், நாட்டுப் பற்றும் உள்ள சிறுவர்களும் இளைஞர்களும் இருந்தால் எந்த நாடும் முன்னேற்றம் அடைவது உறுதி. ஆனந்தனுக்கு உரிய வயது வரும்போது எமது அரசாங்கத்தில் உயரிய பதவி வழங்கப்படும் என்று உறுதியளிக்கின்றேன் எனக்கூறி “வாழ்க ஆனந்தன், வாழ்க ஆனந்தன், வாழ்க ஆனந்தன்” என வாழ்த்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியரின் பிற நூல்கள்

| | |
|---|---|
| கூடில்லாக் குஞ்சுகள் | நாவல் |
| மண்ணைத் தொடாத விழுதுக்கள் | நாவல் |
| கிள்ளை விடு தூது | கவிதைகள் |
| மாங்கனி | சிறுவர் பாடல்கள் |
| பயிர் மேயும் வேலிகள் | நாவல் |
| பாட்டுப் பாடுவோம் | சிறுவர் பாடல்கள் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நாவற்குழியை பிறப்பிடமாகக் கொண்ட கலாபூஷணம் செல்லையா குமாரசாமி அவர்கள் இணுவிலை புகுந்த இடமாகக் கொண்டவர். இதன் காரணமாக அவரது இலக்கியப் படைப்புக்களை நாமும் சுவைத்தறிந்துள்ளோம். நாடறிந்த ஓர் இலக்கிய கர்த்தாவாக விளங்கும் அவர் நாவல்கள், நாடகங்கள், சிறுவர்களுக்கான கவிதைகள் பலவற்றை இலக்கிய உலகிற்குதந்து பெருமை பெற்றதுடன், அவரது சேவையைப் பாராட்டி விருதுகள், பட்டங்களையும் பெற்றுள்ளமை பாராட்டப்பட வேண்டிய விடயமாகும்.

சிறுவர்களுக்கான நவீனம் எழுதுவது என்பது கடினமான ஓர் முயற்சியாகும். சிறுவர்களின் வாசிக்கும் ஆர்வத்தை தூண்டும் வீர, தீர மர்மக் கதைகளாக இருந்தாலே மேலும் அவர்களது வாசிக்கும் திறனை வளர்க்க முடியும். கதையின் மொழிநடை சிறுவர்களின் சொல்லாடலை தெளிந்த கருத்துக்களைக் கொண்டதாக அமைந்திருத்தல் வேண்டும். அந்த வகையில் "அதியசத் தீவினில் ஆனந்தன்" எனும் சிறுவர் நவீனம் ஆசிரியருடைய சிந்தனையின் வெளிப்பாடு மேலும் பல சிறுவர் நவீனங்களுக்கு அத்திவாரமிட்டுள்ளதாகவே கருத முடிகின்றது.

இலக்கிய உலகில் மேலும் பல சாதனைகளை கலாபூஷணம் செல்லையா குமாரசாமி அவர்கள் நிறைவேற்ற வேண்டும், அதுவரை அவர் சுகஜீவியாய் வாழ்ந்து மேலும் பல படைப்புக்களை இலக்கிய உலகிற்கு வழங்க வேண்டும் என இறையருள் வேண்டி வாழ்த்துகின்றேன்.

கலாபூஷணம் கே.எஸ்.ஆனந்தன்
இணுவில்.

Virus Printers Inuvil

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org